# இறையியல் கோலங்கள்

வடிவம் 37 ஜூலை- டிசெம்பர் 2017 வண்ணம் 02



- திருச்சபை வரலாற்றில் ஏற்பட்ட பிரிவினைக் கொள்கைகளும் ஒன்றிப்புக்கான முயற்சிகளும்
- மதங்களுக்கிடையிலான உரையாடலும், இலங்கை மக்களின் ஒன்றிப்புக்கு இதன் அவசியமும்
- திருச்சபையும் திருச்சபைகளும்
- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு தரும் அடிப்படையான படிப்பினைகள்
- பல்சமய உரையாடல்

தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

ST. FRANCIS XAVIER'S SEMINARY
LIBRARY
COLUMBUTHURAI

Vol. : 37
No. : 02
July - December : 2017

வடிவம் : 37
வண்ணம் : 02
ஜீலை – டிசெம்பர் : 2017

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | அருட்தந்தை த.ஜெ.கிருபாகரன் |
| துணை ஆசிரியர்கள் | : | அருட்தந்தை இ.பெற்றூஸ் தயாபரன் |
| | | அருட்தந்தை ம.ம.கொ. ஞானேந்திரன் |
| நிர்வாகக் குழு | : | அருட்சகோ. த. ஜொலிமன் |
| | | அருட்சகோ. சூ. எட்வின் நரேஷ் |
| | | அருட்சகோ. ஜே. நிலான் யூலியஸ் |
| | | அருட்சகோ. ச. லூமன் லோகு |
| | | அருட்சகோ. செ. ஜெபநேசன் |
| | | அருட்சகோ. றே. றெனால்ட் |

| | | |
|---|---|---|
| **Editor** | : | **Rev. Fr. T.J. Kirupaharan** |
| **Sub Editors** | : | **Rev. Fr. I. Petrus Thayaparan** |
| | | **Rev. Fr. M.M.H. Gnanendran** |
| **Administrative Board** | : | **Rev. Bro. T. Joliman** |
| | | **Rev. Bro. S. Edwin Naresh** |
| | | **Rev. Bro. J. Nilan Julius** |
| | | **Rev. Bro. S. Luman Logu** |
| | | **Rev. Bro. S. Jebanesan** |
| | | **Rev. Bro. R. Renald** |

| | | |
|---|---|---|
| **Publication** | : | **St. Francis Xavier's Seminary** |
| | | **Columbuthurai, Jaffna, Sri Lanka** |
| | | **Tel. No. : 021 222 2482, 021 222 7145** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- ஆசிரியர் உரை
- **திருச்சபை வரலாற்றில் ஏற்பட்ட பிரிவினைக் கொள்கைகளும் ஒன்றிப்புக்கான முயற்சிகளும்**
  அருட்கலாநிதி ச.வி.ப. மங்களராஜா
- **மதங்களுக்கிடையிலான உரையாடலும், இலங்கை மக்களின் ஒன்றிப்புக்கு இதன் அவசியமும்**
  அருட்தந்தை ம.ம.கொ. ஞானேந்திரன்
- **திருச்சபையும் திருச்சபைகளும்**
  அருட்தந்தை ம. இரவிச்சந்திரன்
- **இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு தரும் அடிப்படையான படிப்பினைகள்**
  அருட்சகோதரன் சே. ஜஸ்ரின்ராஜா, அ.ம.தி.
- **பல்சமய உரையாடல்**
  அருட்கலாநிதி அ.பி. ஜெயசேகரம்
- **புனித இரண்டாம் யோவான் பவுல்**
  அருட்சகோதரன் ச. யூட் கெமில்டன்
- Synopsis


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து ...

இயேசு தம் சீடர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்று கூறினார் (மாற்.16:15). நற்செய்தியை ஏற்றுக் கொண்டவர்கள் காலத்தின் கோலங்களுக்குள் சிக்குண்டு, இயேசுவின் விருப்பத்தை மறந்து, தமது சொந்தத் திருவுளங்களுக்குள் அடிமைப்பட்டு, வெவ்வேறு காரணிகளினால் பிளவுபட்டனர். ஆக, கிறிஸ்தவம் இன்று பிளவுபட்டு நிற்கின்றது. "ஒற்றுமை திருச்சபையின் ஒர் இயல்புக்கூறு. கடவுள் ஒருவரே; அவர் மகன் இயேசுக்கிறிஸ்துவும் ஒருவரே; திருச்சபை ஒன்றே; அதன் நம்பிக்கையும் ஒன்றே" (கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு – உட்புகுமுன், இரண்டாம் வத்திக்கான் சங்கம்). கிறிஸ்தவத்தின் உண்மை இயல்பிற்கும், உயரிய நோக்கத்திற்கும், நிறுவியவரின் விருப்பத்திற்கும் அமைய கிறிஸ்தவம் ஒன்றாகிட வேண்டும். "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவா.17:2) என்ற இயேசுவின் கனவு நனவாகிட வேண்டும்.

அதே வேளையில், திருச்சபையானது கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றி அக்கறை கொண்டுள்ளது. இது தொடர்பாக அண்மைக்காலங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் தனது ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார். தனி மனிதனதும், மனித சமூகங்களினதும், கடவுள் தந்த மாண்பையும், சுதந்திரத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவர்கள் வாழும் உரிமையையும் நிலைநாட்ட சமயங்களிடையேயான புரிந்துணர்வும் நட்புறவும் பேணி வளர்க்கப்பட வேண்டும்.

இந்த அரையாண்டு "இறையியல் கோலங்கள்" வெளியீடு "கிறிஸ்தவ ஒன்றிப்பும் சமயங்களுக்கிடையேயான உரையாடலும்" என்ற கருப்பொருளில் சில ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகிறது. திருச்சபையின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகவும், இக்காலத்தில் அதிகம் பேசப்படுகின்ற விடயப்பொருளாகவும் இவ்விதழின் கருப்பொருள் அமைவது வாசகர்களில் இது தொடர்பான அறிவை வளர்க்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், செயற்பாடுகளில் ஈடுபடவும் உதவும் என நம்புகிறேன். ஆக்கங்களை ஆழ்ந்து படித்துப் பயன்பெற உங்களை அழைக்கிறேன்.

நட்புடன்
அருட்கலாநிதி த.ஜெ. கிருபாகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபை வரலாற்றில் ஏற்பட்ட பிரிவினைக் கொள்கைகளும் ஒன்றிப்புக்கான முயற்சிகளும்

அருட்கலாநிதி ச.வி.ப மங்களராஜா
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை.

### *முன்னுரை*

இறைமகன் இயேசுவால் ஏற்படுத்தப்பட்டு, பெந்தக்கோஸ்தே தினத்தன்று கன்னி மரியாளுடன் இருந்த திருத்தூதர் மீது இறங்கியமையுடன் செயற்படத்தொடங்கிய திருச்சபை (தி.ப. 1:13,2:4) ஒன்றாக இருக்க வேண்டுமென்றே ஆண்டவராகிய இயேசு விரும்பினார். அந்த ஒற்றுமைக்காகச் செபித்தார் (யோவான் 17:21-23). ஆயினும் தொடக்கத்திலிருந்தே காலத்திற்குக் காலம் பிளவுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. கிறிஸ்தவத்தில் இந்தப் பிளவுபட்ட நிலை அதன் உண்மை இயல்பிற்கும் உயரிய நோக்கத்திற்கும் அனைத்திற்கும் மேலாக அதை நிறுவியவரின் விருப்பத்திற்குமே முரணானது.



1. பிளவுகள் எந்த அளவுக்கு இருந்தனவோ, இருக்கின்றனவோ அந்த அளவு ஒற்றுமை முயற்சிகளும் இடம்பெற்று வந்துள்ளன, வந்தவண்ணமிருக்கின்றன. கிறிஸ்தவத்தின் முக்கிய குறிக்கோளாகிய நற்செய்தி அறிவிப்பிற்கும் இறையரசை ஏற்படுத்துவதற்கும் தடையாக இருப்பது கிறிஸ்தவ சபைகளிடையே வெளிப்படையாக உள்ள பிளவுகள், போட்டிகள், முரண்பாடுகள். கிறிஸ்தவர்களுக்கு இவை பெரும் இடறல்களாக உள்ளமையும் உணரப்பட்டு வந்துள்ளது. இதனால்தான் கிறிஸ்தவ சபைகளுக்கான புரிந்துணர்வு, ஒத்துழைப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுமுயற்சி, ஒன்றிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, தற்போது வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்லப் படுகின்றன.

***கிழக்கத்தய பிளவு***

தொடக்கத்திலிருந்தே இறைமகன் இயேசு வழங்கிய தலைமை ஆயர் பொறுப்பைப் பெற்றுக்கொண்ட புனித இராயப்பரையும் அவர் வழிவழியாக வந்த உரோமை ஆயர்களையும் அனைத்துலகத் திருச்சபை ஏற்று அங்கீகரித்து வந்துள்ளது. புனித இரனேயுஸ், மற்றும் டேர்டுல்லியன் ஆகிய திருச்சபைத் தந்தையர்கள் குறிப்பிட்டதுபோல உரோமைத் திருச்சபையோடு உறவு ஒன்றிப்பு என்பது அனைத்துலகத் திருச்சபையுடன் உறவு ஒன்றிப்பிற்கு சமனானது.

2. ஆயினும் காலப்போக்கில், குறிப்பாக 4ம் நூற்றாண்டிலிருந்து, கத்தோலிக்க திருச்சபையின் முக்கிய கோட்பாடுகளுக்கும் மறை உண்மைகளுக்குமெதிராக அனேகமாக கிழக்கில் உருவாகிய பேதகங்கள், ஆரியக்கொள்கை (Arianism), நெஸ்தேரியக் கொள்கை (Nestorianism), ஓரியல்புக்கொள்கை (Monophysitism), ஒரு விருப்பாற்றல் கொள்கை (Monothelitism), ஆகியவை அந்தந்தக்காலங்களில் கூட்டப்பட்ட பொதுச்சங்கங்களிலும் மற்றும் ஆயர் அமர்வுகளிலும் கண்டிக்கப்பட்டாலும், இவற்றின் விளைவாக, திருச்சபையில், குறிப்பாக கிழக்கத்தய திருச்சபையில், கணிசமான தொகையினர் பிரிந்து சென்று உரோமைத்திருச்சபையிலிருந்து பிரிந்து இயங்கத் தொடங்கியிருந்தமை, 11ம் நூற்றாண்டில் (1054) கிழக்கத்தய திருச்சபை ஒட்டுமொத்தமாகப்பிரிந்து தனிவழி போக களம் அமைத்துக்கொடுத்தது. இந்தப்பிரிவினைக்கான பின்னணியையும் காரணிகளையும் பார்க்கும் போது 8ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இடம் பெற்று வந்த அரசியல், புவியியல், சமய மற்றும், பண்பாட்டுக் காரணிகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

i. திருத்தந்தை கிழக்கத்தய பேரரசரின் பாதுகாப்பிலும் கட்டுப்பாட்டிலும் 8ம் நூற்றாண்டு வரை இருந்து வந்துள்ளார். இஸ்லாம் மார்க்கத்தைத்தழுவிய அரேபியரின் கட்டுப்பாட்டில் படிப்படியாக சிரியா, பலஸ்தீனம், எகிப்து, வட ஆபிரிக்காவுடன் சிறிய ஆசியா மற்றும் கொன்ஸ்தாந்திநோபிள் பின் பகுதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருந்தன. இந்த வேளையில் லொம்பார்டிய இனக்குழுக்கள் உரோமையைச் சூறையாடியபோது கொண்ஸ்தாந்திநோபிள் பேரரசர் உரோமைக்கு எதுவித உதவியையும் வழங்க முடியாதிருந்தது. திருத்தந்தையர் ஆண்டு தோறும் கீழைப்பேரரசருக்குச் செலுத்திவந்த வரியும் நிறுத்தப்பட்டது. 753ல் திருத்தந்தை 2ம் ஸ்ரீபன் கிழக்கில் இருந்து விலகி மேற்கில் உருவாகிப்பலம் பெற்று வந்த பேரரசர் சார்ல்ஸ் வழிவந்த பெப்பின் உடன் பாதுகாப்பு உடன்பாடு செய்து கொண்டார்.

ii. கோட்பாட்டு வேறுபாடுகளில் உருவ வணக்க முறை மேற்கிற்கும் கிழக்கிற்கும் இடையேயிருந்த பிளவை மேலும் ஆழப்படுத்தியது. கிழக்கத்தய திருச்சபையின் உயர் மையமாகிய கொண்ஸ்தாந்தி நோபிள் உயர் மையமும் பேரரசரும் புனிதர்கள், மறைசாட்சியர், மற்றும் வானதூதர்களின் படங்களை தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பயன்படுத்தத்தடை விதித்தனர். எனினும் திருத்தந்தையின் அனுசரணையுடன் கிழக்கில் நிசேயாவில் 787ல் நடந்த 2ம் நிசேயா பொதுச்சங்கத்தில் உருவ வணக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் மேற்கில் பேரரசர் சார்ல்ஸ் இச்சங்கத்தின் தீர்மானத்திற்கு உடன்பட மறுத்துவிட்டார்.

iii. 1ம் நிசேயா சங்க விசுவாசப்பிரமாணத்திற்கு மேலதிகமாக 381ம் ஆண்டு இடம் பெற்ற 1ம் கொண்ஸ்தாந்திநோபிள் சங்கத் தீர்மானத்தின்படி 'பரிசுத்த ஆவி தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும்' என்ற சொற்றொடர் சேர்க்கப்பட்டு 5ம் நூற்றாண்டிலிருந்து மேற்கில் இதுவே வழக்கிலிருந்து வந்தது. இதில் மகனிடமிருந்தும் (Filioque) என்ற பிற்சேர்க்கையை கிழக்கத்தய திருச்சபை ஏற்கவில்லை.

iv. உயிர்ப்புத் திருநாள் கொண்டாடும் தினம் பற்றியும் கிழக்கு மேற்குத் திருச்சபைகள் ஒத்தகருத்துடன் இருக்கவில்லை. மேற்கில் இயேசு உயிர்த்தது ஒரு ஞாயிறு தினமாதலால் யூதர்களின் நீசான் மாதத்தில் 14ம் திகதிக்குப் பின்வரும் ஞாயிறு தினம் உயிர்ப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது. கிழக்கில் எந்தநாளில் வந்தாலும் உயிர்ப்பு நாள் நீசான் மாதத்தின் 14ம் திகதியே கொண்டாடப்பட்டுவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. போசியுஸ் (Photius) பிரிவினை – கிழக்கத்தய பேரரசர் சீசர் பார்டாசுக்கும் மறை உயர்தந்தை இக்னேசியுசுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 858ல் பேரரசர் இக்னேசியுவை பதவி நீக்கி மோசியுதை மறை உயர் தந்தையாக நியமித்தார். திருத்தந்தை 1ம் நிக்கோலாசும் மேற்கத்தய ஆயர்களும் 863ல் நடந்த மன்றத்தில் போசியுஸ்சை முன்னர் குறிப்பிட்ட பிரச்சினைக்குரிய மேலைத் திருச்சபையின் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் முன்னிட்டு கண்டித்தார்கள். இந்த இறுதிப்பிளவும் 1054ல் ஏற்பட்ட தீர்க்கமான பிளவுக்கு வழிசமைத்தது.

## கீழை - மேலை திருஅவைகளின் தீர்க்கமான பிளவு

போசியஸ் காலச்சிக்கலுக்குப்பின் கிழக்கு திருஅவைக்கும் மேற்குத் திருஅவைக்கும் இடையே நிலவிய உறவு மேலும் கசப்பாகிய வண்ணமேயிருந்தது. ஏற்கெனவே நிலவிவந்த மொழி வேறுபாடு, தேசியவாதம், இருஅவை அமைப்புமுறை வேறுபாடுகள், கட்டுப்பாடு, திருவழிபாட்டு வேறுபாடுகள், இறையியல் கோட்பாட்டு வேறுபாடு எல்லாமே மோசமாகிய வண்ணமிருந்தன. அரசியல் மாற்றங்களும் நிலைமையை இன்னும் மோசமடையச்செய்தன.

கொண்ஸ்தாந்திநோப்பிள் மறை உயர்தந்தையாக மைக்கல் செருலாரியுஸ் இருந்தபோது (1043-1058) பிரிவினைக்கான தீர்க்கமான இறுதி நகர்வுகளை மேற்கொண்டார். இவர் மேற்கத்தய திரு அவையினரைப் பேதகர்கள் என்று குறிப்பிட்டார். அவர்கள் திருப்பலியில் புளியாத அப்பத்தைப் பயன்படுத்துவோர் என்றும், மூச்சடைத்துச் செத்தவற்றின் இறைச்சியை உண்போர் என்றும் பல குற்றச்சாட்டுக்களை அடுக்கினார். பாப்பரசர் 9ம் சிங்கராயர் (1049-1054) தமது இறையியலாள ரைக் கொண்டு மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்தார். 1054ல் கிழக்கில் பேரரசர் 9ம் கொண்ஸ்ரன்ரைனின் வேண்டுகோளின்படி மூவரடங்கிய பாப்பரசரின் உயர்மட்டத் தூதுக்குழு கொன்ஸ்தாந்திநோபிள் வந்தது. ஆயினும் மறை உயர்தந்தையாகிய செருலாரியுஸ் இவர்களைக் கணக்கிலெடுக்கவுமில்லை, அவர்களை திருப்பலி ஒப்புக் கொடுக்கவிடாது மக்களையும் அவர்களுக்கெதிராகத் தூண்டியும்விட்டார். பாப்பரசரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புதல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தூதுக்குழுவின் முக்கியமான வராகிய ஹம்பர்ட் (Humbert) மிகவும் கடுமையான வார்த்தைகளால் செருலாரியுசிற்கெதிராகத் திருஅவையிலிருந்து விலக்கும் சாசனத்தை எழுதி ஜூலை 16, 1054இல் கூடியிருந்த குருக்கள், மக்கள் முன்னிலையில் புனித சோபியா ஆலய உயர் பீடத்தில் அதனை வைத்தார். இதற்கு பதிலளிக்கும் முகமாக 867ல் போசியுஸ் எழுதிய திருஅவை சாசனத்தைப் புதுப்பித்து மேற்கத்தைய திருஅவையினரைச் செருலாரியுஸ் திருஅவைக்குப் புறம்பானவர்கள் என்று அறிவித்தார்.

### ஒற்றுமைக்கான முயற்சிகள்

திருச்சபையில் கிழக்கு – மேற்குத் திருச்சபையென ஏற்பட்ட பாரிய பிளவைச் சீர்செய்ய 13ம் நூற்றாண்டிலும் 15ம் நூற்றாண்டிலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. அம்முயற்சிகள் பின்வருபவை:

### 14வது பொதுச்சங்கம் (1274)

இச்சங்கம் பாப்பரசர் 10ம் கிரகோரியாரினால் லயோன்ஸ் நகரில் கூட்டப்பட்டது. இச்சங்கத்தின் குறிக்கோள்களுள் ஒன்று கிழக்கு –மேற்குத் திருச்சபைகளை ஒன்றிணைப்பது ஆகும். இது லயோன்ஸ் நகரில் கூட்டப்பட்ட இரண்டாவது சங்கமாகும். (முதலாவது லயோன்ஸ் சங்கம் 1245ல் கூட்டப்பட்டது. இச்சங்கத்தில் பல குறிக்கோள்களுள் ஒன்றாக கிழக்கு மேற்குத்திருச்சபையின் ஒற்றுமையும் இருந்தது. ஆயினும் இது கைகூடவில்லை). 2ம் லயோன்ஸ் சங்கத்தின் சாதனைகளுள் ஒன்று கிழக்கில் இருந்துவந்த மன்னர் 8வது மைக்கல் பாலேயோலோகஸ் (Michael VIII Palaeologus) அவர்களின் பிரதிநிதிகள் பாப்பரசரது உயர் அதிகாரத்தையும், மேற்கத்தய திருச்சபையின் விசுவாச ஷரத்துக்களையும் ஏற்றுக்கொண்டமையாகும். எனினும் இந்த ஒற்றுமை குறுகியகாலமே நீடித்தது. 1289ல் இன்னுமொரு தடவை பிளவு ஏற்பட்டது.

### 17வது பொதுச்சங்கம் (1438-1445)

பெர்ராரா – புளொரன்ஸ் (Ferrara-Florence) இலும் பின்னர் உரோமையிலும் நடந்த இச்சங்கம் 7 ஆண்டுகாலம் நீடித்தது. இச்சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டு விடயங்கள் பற்றியும் அத்துடன் பிரதானமாக கிழக்கு – மேற்குப் பிரிவினையைச் சீர்செய்வதிலும் ஈடுபட்டது. பாப்பரசர் 4ம் யூஜின் தலைமை தாங்கினார். கிழக்குத் திருஅவையிலிருந்து மன்னர் 8வது ஜோண் பாலேயோலொகஸ் தலைமையில் (John VIII Paleologus) மறைத்தந்தை (Patriarch) 2வது ஜோசப் உடன் 700 பேர் வந்திருந்தனர். மற்யற கிழக்கத்தய மறைத்தந்தையரின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கிழக்குத் திருஅவையிலிருந்து வந்தவர்களுள் நிசேயாப் பேராயர் ஜோண் பெசாரியோன் (John Bessarion) குறிப்பிடத்தக்கவர். இவர் திரு அவை ஒற்றுமைக்காக அயராது உழைத்தார். இவர் 1429ல் கருதினாலாக நியமனம் பெற்று சங்கம் நிறைவடைந்த பின் மேற்கிலேயே தங்கினார். ஒற்றுமைக்காகப் பாடுபட்ட இன்னுமொருவர் ரஸ்யத் திருஅவையின் கீவ் (Kiew) நகரப் பேராயர் இசிதோர் ஆவார். இவரும் 1439ல் கருதினால் ஆக நியமிக்கப்பட்டார்.

சங்கம் ஆரம்பத்திலிருந்து கோட்பாடுகள் ரீதியில் மட்டுமல்ல சங்க ஒழுங்குமுறைகள், முன்னுரிமைகள் சம்பந்தமாகவும் சிக்கல்களை எதிர்கொண்டது. அவ்வப்போது சங்கத்திலிருந்து விலகப் போவதாகவும் கிழக்கத்தய திருஅவையினர் அச்சுறுத்தினர். எனினும் துருக்கியர், பாங்கன் தீபகற்பத்தைக் கைப்பற்றி கொன்ஸ்தாந்திநோபிள் பிரதேசத்தையும் கைப்பற்றுவதற்கு முனைந்தமையால் மேற்குத் திருஅவையுடன் ஒன்றிணைவதால், தான் மேற்கிலிருந்து இராணுவ ஆதரவைப் பெற்றுக் கொண்ஸ்தாந்திநோபிளைப் பாதுகாக்கலாம் என்று கருதியதனால்தான் விலகாது தொடர்ந்து சங்கத்திலேயே இருந்தனர்.

மன்னர் 8ம் ஜோண் பாலெலோகஸ் கோட்பாடு சம்பந்தமான வாதப்பிரதி வாதங்களுக்குள் செல்லாது ஒரு பொதுவான ஒன்றிப்பே போதும் என்று கருதினார். எனினும் இறுதியில் 'தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும்' (filioque) என்ற வார்த்தை மேற்குத் திருஅவையில் விசுவாசப்பிரமாணத்தில் சேர்ந்தது போல கிழக்குத் திருஅவையிலும் சேர்ப்பதா? இல்லையா? என்பது பற்றிய விவாதங்கள் காரசாரமாக நீடித்தன. 1439ம் ஆண்டு ஜனவரியில் பெர்ராரா நகரில் ஒருவித தொற்றுநோய் பரவியதால் சங்கம் புளோரன்ஸ் நகருக்கு மாற்றப்பட்டது. அங்கும் விவாதங்கள் தொடர்ந்து இறுதியில் ஒருவாறாக 'மகனிடமிருந்தும்' (filioque) எனும் சொற்றொடரை தமது விசுவாசப்பிரமாணத்தில் சேர்க்க கிழக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅவையினர் உடன்பட்டனர். உத்தரிப்புத்தலம் (இறுதித்தூய்மையுறு நிலை), இறுதிப் பேரின்பநிலை (Beatific Vision) ன் ஆரம்பம், திருப்பலியில் புளியாத அப்பத்தைப் பயன்படுத்தல், தூய ஆவிவருகை மன்றாட்டு (Epiclesis), உரோமைத் திருஅவையின் முதன்மை (Primacy) ஆகிய விடயங்களிலும் உடன்பாடு எட்டப்பட்டது. ஜூலை 6ம் திகதி 1439ம் ஆண்டு பாப்பரசர் 4ம் யூஜீன் 'லேத்தெந்துர்' சேலி (Laetentur Coeli) எனும் மடல் பிரகடனத்தின் படி இரு திருஅவைகளதும் ஒன்றிணைவை அறிக்கையிட்டார். பின்னர் கிழக்கத்தய திருஅவையினர் சென்றபின் மற்றைய சிறிய சிறிய திருஅவைகளுடனான இணைப்பும் பெரிய சிக்கலின்றி நிறைவேற்றப்பட்டது. ஆயினும் கொண்ஸ்தாந்திநோபிள் மக்கள் மத்தியில் இவ்வொற்றுமை உடன்பாடு பிரபல்யம் பெறவில்லை அத்துடன் கிழக்கத்தய மன்னரும் திருஅவையினரும் மக்களும் துருக்கியருடைய தாக்குதலைச்சமாளிக்க மேற்கிலிருந்து வரும் என்று எதிர்பார்த்த உதவி வீண் என்பது தெரியவரவே இரு அவைகளது ஒற்றுமையும் கேள்விக்குறியானது. 1453ம் ஆண்டு கொண்ஸ்தாந்திநோபிள் துருக்கியரிடம் வீழ்ந்ததுடன் ஊசலாடிக்கொண்டிருந்த இரு அவைகளுக்குமிடையிலான ஒற்றுமை கானல் நீரானது.

### *மேலை திருஅவையின் உள்ளக நிலை*

ஒரு புறத்தில் கீழைதிருஅவை – மேலை திருஅவைப் பிளவைச் சீர்செய்ய எடுத்த முயற்சிகள் பயனளிக்காது போனபோது மேலைதிரு அவையின் களநிலைமைகள் ஒரு பாரிய உள்ளகப்பிளவை நோக்கிச்சென்று கொண்டிருந்தது எனலாம். இப்பிளவை நோக்கிய பயணம் பாப்பரசர் 8ம் பொனிப்பாஸ் (1294-1303) பிரான்ஸ் அரசருடன் 1303ல் (4ம் பிலிப்) முரண்பட்டதுடன் ஆரம்பமானதெனலாம். தொடர்ந்து ஏற்பட்ட குழப்ப நிலைகளால் துரதிஷ்டவசமாக திருத்தந்தையர்கள் பிரான்சில் உள்ள அவிஞ்ஞோன் நகரில் தங்கியிருந்தமையால் திருச்சபைத் தலைமைப்பீடம் பிரெஞ்சு அரசின் கைப்பொம்மையாகவேயிருந்தது எனலாம். திருத்தந்தையர்கள் அவிஞ்ஞோனில் இருந்து செயற்பட்ட 70 ஆண்டுகளும் பிரெஞ்சு அரசின் அடிமைகள் போல இருந்தமையால் யூதர்கள் பபிலோனில் அடிமைகளாக இருந்து 70 ஆண்டுகளை நினைவூட்டியமையால் இக்காலம் பபிலோனிய அடிமை நிலை (Babylonian Captivity) என வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பபிலோனிய அடிமை நிலையால் சீர்குலைந்து போயிருந்த திருஅவை மேலும் ஒரு சிக்கலை – ஒரு பெரும் பிளவை எதிர்கொண்டது. 1378ம் ஆண்டு உரோமையில் பாப்பரசர் 6ம் அர்பன் காலத்திலிருந்து இந்தப் பிளவு தோன்றியது எனலாம். பாப்பரசர் 6ம் அர்பனின் எதேச்சதிகாரப் போக்கின் காரணமாக விரக்தியடைந்த கணிசமானளவு கருதினால்மார் வேறு ஒருவரைப் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்க, அவர் 7ம் கிளமென்ற் எனும் பெயரையெடுத்து அவிஞ்ஞோன் சென்றார். இதனால் மேற்கத்தய திருஅவை இரு அணிகளாக இரு திருத்தந்தையர்களின் கீழ் பிளவுபட்டு இயங்கத் துவங்கியது. இப்பிளவு 39 வருடகாலம் நீடித்தது. ஐரோப்பிய அரசுகள் பிளவுபட்ட நிலையில், சில அவிஞ்ஞோன் திருத்தந்தையையும் சில உரோமைத் திருத்தந்தையையும் ஆதரித்தன. திருஅவையிலும் குழப்பங்கள் உருவாயின. கிறிஸ்தவ வாழ்வு பாதிக்கப்பட்டது. இரண்டு திருத்தந்தை இருப்பார்களேயானால் முதன்மை இடம் (Primacy) தவறாவரம் ஆகியவற்றுக்கான பொருள் என்ன? ஆகிய கேள்விகள் விடைகாணமுடியாத வினாக்களாயிருந்தன.

### *தீர்வு காண முயற்சி*

அந்நாட்களில் திருஅவை இரு திருத்தந்தையருடன் பிளவு பட்டுப் பெரும் குழப்பநிலையில் இருந்தபோது வல்லமையுள்ள நடுநிலைமை வகிக்கக்கூடிய சக்தியாக உருவெடுத்தது பரிஸ் பல்கலைக்கழக இறையியலாளர் குழுவினராவர். 1394 இவர்கள் மூன்று வழிகளை பரிசுத்த ரோம சாம்ராஜ்ய அரசர் சார்ல்ஸ்ஸிடம் முன்வைத்தனர். அவை:

1. இரண்டு திருத்தந்தையரையும் பதவி விலகச்செய்து, புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுப்பது
2. பின்னர் பிரச்சினையைத் தீர்க்க கலந்துரையாடலை மேற்கொண்டு சமரசத்தீர்வுக்கு வருவது
3. பொதுச்சங்கத்தைக்கூட்டி முடிவு எடுப்பது

இவற்றுள் இருவரையும் பதவி விலகச்செய்வது சாத்தியப் படவில்லை. அவிஞ்ஞோனில் 7ம் கிளெமென்ற் இறந்தபோது அவரது இடத்திற்கு பெட்றோ டி லூனா தெரியப்பட்டு 13ம் பெனடிக்ற் எனும் பெயரை எடுத்துக்கொண்டார். இவர் பதவி விலக உடன்படவில்லை. 1407ல் சவோனா எனுமிடத்தில் 13ம் பெனடிக்றும் உரோமை வழித்திருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை 12ம் கிறகோரியும் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டும், இச்சந்திப்பு இடம் பெறவில்லை. எனவே இரு பிரிவிலிருந்தும் விரக்தியடைந்த கருதினால்மார் 'சங்கம் கூடுவது' என்ற மூன்றாவது முடிவுக்கு வந்தனர். அதன்படி 1409ல் பீசா நகரத்தில் சங்கத்தைக்கூட்டி இருந்த இரண்டு திருத்தந்தையர்களையும் பதவி நீக்கம் செய்து 5ம் அலெக்சாண்டர் என்பவரைத் திருத்தந்தையாகத் தெரிந்தனர். முன்னைய இரு திருத் தந்தையர்களும் பதவி விலக மறுத்தமையால் தற்போது 3ம் திருத்தந்தையுடன் நிலைமை மேலும் சிக்கலானது. 5ம் அலெக்சாண்டர் 11ம் மாதத்திலேயே இறக்க, அவருக்குப்பதிலாக 23ம் அருளப்பர் திருத்தந்தையாகத் தெரியப்பட்டார். சிக்கலைத் தீர்க்க பொதுச்சங்கம் தான் ஒரே வழி என உணரப்பட்டது. உரோமை சாம்ராஜ்யப் பேரரசர் சிஜிஸ்மண்ட்டின் வற்புறுத்தலால் திருத்தந்தை 23ம் அருளப்பர் 1414ல் கொண்ஸ்தான்சு நகரத்தில் பொதுச்சங்கத்தைக் கூட்டினார். சங்கம் நடந்து கொண்டிருந்தபோது, தான் திருத்தந்தையாக உறுதிப்படுத்தப்படமாட்டார் என்பதை 23ம் அருளப்பர் புரிந்து கொண்டு தலை மறைவானார். ஆயினும் இவர் கண்டுபிடிக்கப்பட்டுப் பதவிநீக்கம் செய்யப்பட்டார். புதிய திருத்தந்தையாக 5ம் மார்ட்டின் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் இப்பிளவு முடிவுக்கு வந்தது. இப்பிளவினால் திருஅவை பெரிதும் பாதிக்கப்பட்டது. மக்கள் குழப்பமடைந்து திருஅவை மட்டில் அதிருப்தி கொள்ளத் தொடங்கினர். திருத்தந்தையரைவிட திருச்சங்கத்துக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கலாம் (Conciliarism) என்ற கொள்கை வலுப்பெற்றது.

### *16ம் நூற்றாண்டில் மார் டின் லூதரின் சீர்திருத்தப் புரட்சி*

15ம் நூற்றாண்டில் திருஅவையின் பாரிய பிளவு கொண்ஸ்தான்சுச் சங்கத்தினால் (1414-1418) தீர்க்கப்பட்டாலும் திருஅவைக்கு முழுவதுமான (தலையிலும் உடலிலும் Head and member) சீர்திருத்தம் அவசரமாகத் தேவைப்பட்டது. இந்த தேவையை உணரப்பண்ணியவர் மார்ட்டின் லூதர் (1483-1546) எனக் கொள்ளலாம். இவரைப்பற்றிய பல முரணான வியாக்கியானங்கள் எழலாம். திருஅவையின் ஒற்றுமையை அழித்தவர், ஆண்டவரின் திராட்சைத்தோட்டத்தைச் சேதமாக்கியவர், துறவற இல்ல அமைப்பின் அடித்தளத்தை நொறுக்கியவர் என்பர் சிலர். மறுபுறத்தில் அவர் தூய்மையான நற்செய்தியை எடுத்துரைப்பதைப் புதுப்பித்தவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலிய உண்மையை வெற்றிகரமாக வெளிக்கொணர்ந்தவர், ஊழல் மிகுந்த திருஅவையைத் தட்டிக்கேட்டுச் சீர்திருத்தத்திற்கு வழிவகுத்தவர் என்றும் பிறர் கூறுவர். திரு அவையைப் பிளவுபடுத்துவது இவரது நோக்கமாக இல்லாவிட்டாலும், இவர் ஆரம்பித்த புரட்சி இவருடைய கட்டுப்பாட்டையும் மீறிப் பாரிய சக்தியாக உருவெடுத்து திரு அவையையே பிளவுபடுத்தி, பின்னர் காலப்போக்கில் பல்வேறு பிரிவுகளும் ஏற்பட்டு ஒன்றுடன் ஒன்று கோட்பாடுகளிலும் முரண்பட்டு வன்முறைகளும் வெடித்து திருஅவை பல பிரிவுகளாகிச் செல்லுமளவிற்கு வந்தது.

1537ம் ஆண்டு திருத்தந்தை 3ம் சின்னப்பர் பொதுசங்கம் கூடுவது பற்றிறிவித்தபோது லூர்தரியக்கம் அதனை ஏற்கவில்லை. 1545ல் திரெந்து (Trent) நகரில் சங்கம் கூட சீர்திருத்த அவையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர்கள் அதனை ஏற்கவில்லை.

### *ஐரோப்பாவில் திரு அவையின் ஒற்றுமைக்கு மேலும் சோதனைகள்*

ஜேர்மனியில் உருவான லூர்தரின் திருஅவைக்கு எதிரான எதிர்ப்புக்கள் போல ஐரோப்பாவின் வேறு இடங்களிலிருந்தும் சமகாலத்தில் எதிர்ப்புக்கள் எழத் தொடங்கின. இவ்வாறாக சுவிஸ்லாந்தில் சுவிங்கிலியும் விவிலியத்தை ஆழ்ந்து படித்து அதற்கு முரணானவற்றை கேள்விக்குட் படுத்தினர். லூதருடன் எல்லா விடயங்களிலும் இவர் ஒத்துப்போனார். என்று சொல்லமுடியாது. சுவிஸ்லாந்தில் மத வன்முறை வெடித்தபோது அதில் அவர் இறந்தார். ஆயினும் அவரது கோட்பாடுகள் பரவிய வண்ணாமாயிருந்தன.

பிரான்சில் தோன்றிய ஜோன் கல்வின் (1509-1564) தமது பாணியிலான சீர்திருத்தத்தை முன்னெடுத்தார். கல்வின் லூதரிலும் பார்க்கச் சிறந்த நிர்வாகியாயிருந்தார். திருவிவிலியத்திற்கும் இறை நம்பிக்கைக்கும் அழுத்தம் கொடுத்தார். சென்ம பாவத்தால் மனிதன் தண்டனைக் குரியவனானான். ஆயினும் இறைவன் தான் முன்குறித்து வைத்தவர்களை மீட்பரின் (Predestination) கல்வின் மனதில் கொண்டிருந்த 'கனவு' த்திருச்சபையில் குற்றவாளிகள் கடுமையாக தண்டனைக்குள்ளாயினர்.

லூத்தரின் பிரச்சனை ஆரம்பமானபோது உரோமைத்தலைமை பீடத்திற்குத் தனது முழு ஆதரவையும் வழங்கி அதனை பாராட்டவும், இங்கிலாந்து அரசர் 8ம் ஹென்றி ஒரு வித்தியாசமான காரணத்திற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோமையுடன் முரண்பட அது இன்னுமொரு பிரிவினைக்கு வழிவகுத்து அரச கொள்கையாக இங்கிலாந்தும் உரோமைத்திரு அவையிலிருந்து பிரிந்து அங்கிலிக்கன் திரு அவை ஆரம்பமானது. இங்கிலாந்து அரசன் அதன் தலைவர் ஆனார். 8ம் ஹென்றிக்கும் அரசி கத்தரினுக்கும் ஆண் வாரிசு இல்லாததால் அத்திருமணத்தைச் செல்லுபடியற்றதாக்கும்படி கேட்டதற்குப் பாப்பரசர் உடன்படாமையே அதன் காரணம். அங்கிலிக்கன் சபையில் சேராது பாப்பரசருக்குப் பிரமாணிக்கமாயிருந்த பலர் மறைசாட்சிகளாயினர்.

## *திரெந்து பொதுச்சங்கம்* (Council of Trent) (1545-1560)

நீண்ட கால அழுத்தத்திற்குப்பின் திருத்தந்தை 3ம் சின்னப்பர் (1534-1549) காலத்தில் திரெந்து நகரில் சங்கத்தின் முதல் அமர்வு 1545ம் ஆண்டு டிசம்பர் 13ம் திகதி ஆரம்பமானது. பிரிவுகளின் பின்னணியில் கத்தோலிக்க திரு அவையின் கோட்பாடுகளை உறுதிசெய்வதும் பல பிரிவினைகள் ஏற்பட முக்கிய காரணங்களிலொன்றாகிய திரு அவையின் வாழ்வைச் சீர்செய்வதும் சங்கத்தின் பிரதான இலக்குகளாயிருந்தன.

கிறிஸ்தவ உண்மையின் ஊற்று விவிலியம் மட்டுமல்ல அத்துடன் சேர்ந்து பாரம்பரியமும் என்று சங்கம் உரைத்தது. இறையூக்கம் பெற்ற விவிலிய நூல்கள் எவையென்று வலியுறுத்தப்பட்டன. ஏழு அருளடையாளங்களின் சிறப்பு வலியுறுத்தப்பட்டு நம்பிக்கையால் மட்டுமல்ல இறைவனுக்கு ஏற்புடைய செயல்களாலும் நாம் மீட்புப் பெறுகிறோம் என்று கூறப்பட்டது. நற்கருணையைப் பொறுத்தமட்டில் அப்பமும், இரசமும் அடையாள முறையிலல்ல, மாறாக கருப்பொருள் மாற்றக்கொள்கை அடிப்படையில் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுகிறது என்று வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பேரரசர் சார்லசின் ஏற்பாட்டால் சீர்திருத்த அவையினர் குழுவொன்று சங்கத்தில் பங்கெடுக்க வந்தது. இவர்கள் மீண்டும் எல்லாவற்றையும் திரும்ப விவாதிக்க வேண்டும் என்றும் மற்றும் நிறைவேற்ற முடியாத வேறு நிபந்தனைகளையும் முன்வைத்தனர். இவற்றுக்கு சங்கம் உடன்பட்டதால் இவர்கள் வெளியேறினர். இச்செயலின் வழியாக சீர்திருத்தத்திற்கு திருஅவையினருடன் உரையாடி ஒன்றிணைப்பொன்றைக் காணும் எதிர்பார்ப்பு முறிந்தது. 1564ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரியில் சங்கத்தின் கொள்கைகள் திருத்தந்தையால் பிரகடனப்படுத்தும் வரை சீர்திருத்த அவையினருக்குச் சங்கத்தில் எதுவித பங்கும் இருக்கவில்லை.

### *பிரிவினைகள் நிரந்தரமாதல்*

திரெந்து பொதுச்சங்கம் கத்தோலிக்க திருஅவையின் முக்கிய வரலாற்று நிகழ்வாக, ஒரு திருப்பு முனையாக இருந்து அதன் வருங்கால செயல்திட்டத்திற்கான வரைபடத்தை வரைந்து கொடுத்தாலும் ஐரோப்பாவெங்கும் பிரிந்து சென்ற பல்வேறு சபையினரை மீண்டும் ஒற்றுமைப்படுத்தவில்லை. பல்வேறு இடங்களில் மதத்தின் பெயரால் மோதல்களும் போர்களும் வெடித்தன. பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்தனர். இறுதியில் 1648ல் பேரழிவுகளை விளைவித்த 30 வருடப் போருக்குப்பின் (1618-1648) வெஸ்ட்பாலியா சமாதான உடன்படிக்கை (Peace of Wesphalia) ஏற்படுத்தப்பட்டது. ஒரு குழுவினர் சரியெனக் கொண்டுள்ள மீட்பைப்பற்றிய இறையியல் கொள்கையை மற்றொரு குழுவினர் கொண்டுள்ள மீட்பின் கருத்தியல்படி எதிர்த்து மறுத்து வெற்றிபெற முடியாது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் எல்லா சாராராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட (திருத்தந்தை 10ம் இன்னசென்ற் இதனை ஏற்கவில்லை) அன்பில் பிறந்த அமைதி ஒப்பந்தமல்ல. அன்று சமய விவகாரங்களில் எழுந்த வேண்டாவெறுப்பு ஒரு வழியாக சகிப்புத் தன்மையைக் கொணரத்தூண்டியது எனலாம்.

### *கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள் முனைப்புப் பெறல்*

கத்தோலிக்க திருஅவை ஒன்றிப்பு முயற்சிகளில் தொடக்கத்தில் ஆர்வம் காட்டியதாகக் கூறமுடியாது. ஒன்றிப்பு என்றால் பிரிந்து சென்ற சபைகள் மீண்டும் வந்து தாமாக கத்தோலிக்க திருஅவையில் இணைவது தான் என்றும், கத்தோலிக்க திருஅவைக்கு வெளியே மீட்பு இல்லை என்ற நிலைப்பாட்டிலேயுமே திருத்தந்தையர்களும் இருந்து வந்துள்ளார்கள். 19ம் நூற்றாண்டில் முதல்முறையாக காத்திரமான ஒன்றிப்பு முன்முயற்சிகள் கத்தோலிக்க சமயத்திற்கு வெளியேயே மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் கத்தோலிக்க திருச்சபை இவற்றில் பங்கெடுக்கவில்லை. பின்னர் மெது மெதுவாகத்தான் கத்தோலிக்க திருச்சபை இவற்றில் ஈடுபடலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய கிறிஸ்தவ ஒன்றிப்பு முன்னெடுப்புக்கள் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டன எனலாம். சீர்திருத்தத் திருஅவையினர் 1910ம் ஆண்டு எடின்பரோ உலக மறைபரப்புச்சபையை (Edinbourgh World Missionary Conference), ஆரம்பித்தனர். இதிலிருந்து 1925ல் சர்வதேச மறைபரப்பு சபையும் (International Missionary Council) வாழ்வும், பணியும் பற்றிய அனைத்துலகக்கிறிஸ்தவ சபையும் (Universal Christian Conference on Life and work), பின் 1927ல் நம்பிக்கையும் அமைப்பு முறை பற்றிய உலக சபையும் உருவாயின. மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் எல்லாம் 1948ம் ஆண்டு உலகத் திருச்சபைகளின் சபை (World Council of Church) தோன்றுவதற்கு வழிவகுத்தன. ஆரம்பக்கட்டத்தில் இவற்றுக்கான கத்தோலிக்க திருச்சபையின் பதில் திருத்தந்தை 15ம் பெனடிக்ற் (திருத்தந்தையாக 1914-1922) வார்த்தைகளில் கூறுவதாயின், இந்த ஒன்றிப்பு கிறிஸ்துவின் அனைத்துலகத் திருஅவை தனக்குரிய அடிப்படைகளை விட்டுக்கொடாமல் இருப்பதில் தங்கியுள்ளது என்பதாகும். எனினும் இதற்கு முன்னதாக திருத்தந்தை 13ம் லியோ (திருத்தந்தையாக 1878-1903) காலத்திலிருந்து கர்தினால் ஜோசப் மெர்சியர், மற்றும் போல் கூட்டுரியர் ஆகியோர் தனிப்பட்ட ரீதியில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான சில முயற்சிகளை எடுத்தனர். 2ம் வத்திக்கான் சங்கத்துக்கு முன் உரோமைத் திருப்பீடம் முதன் முதலாகச் சில முயற்சிகளையெடுத்தது. உ+ம் திருத்தந்தை புனித 23ம் ஜோண் (திருத்தந்தையாக 1958-1963) அங்கிலிக்கன் திருஅவைத் தலைவராகிய கன்ரர்பெரிபேராயர் ஜியோவிறி பிஷர் (Geoffrey Fisher) அவர்களை வத்திக்கானில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கத்தோலிக்க திருஅவையின் கொள்கைப் பிரகடனமாக 2ம் வத்திக்கான் சங்க ஏடுகள் சில விளங்குகின்றன. அவை: Unitatis Redintegratio – கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றியது, Orientalium Ecclesiarum – கத்தோலிக்க கீழைச்சபைகள், Lumen Gentium – திருச்சபை. இவற்றில் காணப்படும் அடிப்படைக்கருத்துக்களாவன – கிறீஸ்து திருத்தூதர்கள் மீதும் அவர்கள் வழிவருபவர்கள் மீதும் திருஅவையைக்கட்டியெழுப்பினார். பேதுருவும் அவர் வழிவருபவரும் அதன் தலைவர்களாகவும் உரோமைத் தலைமை ஆயர்களாகவும் இருந்தனர். திரு அவையின் ஆரம்ப காலத்திலிருந்தே பிரிவினைகளும் இருந்துவந்துள்ளன. ஆயினும் பிரிந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன சகோதரரும் கத்தோலிக்க திருஅவைக்குள்ள அருளின் நிறைவைப் பல்வேறு அளவுகளில் கொண்டுள்ளனர். அவர்கள் கத்தோலிக்க கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகளில் ஈடுபட்டு கிறிஸ்தவ ஒன்றிப்பை முன்னெடுத்துச் செல்ல முயலவேண்டும்.

2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் கிறிஸ்தவ ஒன்றிப்பு சம்பந்தமாக எடுத்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி கிறிஸ்தவ ஒன்றிப்பை முன்னெடுத்துச் செல்ல ஒரு செயலகம் ஏற்படுத்தப்பட்டு, கத்தோலிக் கரல்லாத திருஅவையினருடன் ஒத்துழைப்பையும், உரையாடல்களையும் முன்னெடுத்துச் செல்ல வழிகாட்டுதல்கள் 1967 இலும் 1970 இலும் உரோமையால் வகுக்கப்பட்டன.

வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து வந்த திருத்தந்தையர்கள் தற்போதுள்ள திருத்தந்தை பிரான்சிஸ்வரை கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு முன்னுரிமை கொடுத்து மற்றத் திருஅவைத் தலைவர்களைச் சந்திப்பது, கூட்டுப் பிரகடனங்களை வெளியிடுவது, ஒன்றிப்பு வழிபாடுகளில் ஈடுபடுவது, புரிந்துணர்வு உடன்படிக்கைகளை வெளியிடுவது ஆகியவற்றில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. தலத்திருச்சபை மட்டத்திலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வழிபாடுகள் குறிப்பாக ஜனவரி 18-25 வரையுள்ள கிறிஸ்தவ ஒன்றிப்பு வார வழிபாடுகள், மற்றும் உரையாடல்கள், பொதுச்செயல் திட்டங்கள் ஆகியவை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களுக்கிடையிலான உரையாடலும் இலங்கை மக்களின் ஒன்றிப்புக்கு இதன் அவசியமும்

அருட்தந்தை ம.ம.கொ. ஞானேந்திரன்
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

இன்று என்றுமில்லாதவாறு இலங்கையின் பன்முகத்தன்மை, திட்டமிடப்பட்ட குழப்பங்களுக்கிடையே சிக்கித் தவித்துக்கொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயம். "வரலாறு வழிகாட்டல்" என திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைப்பது நாம் கருத்தில் கொள்ளவேண்டிய காலமாக நிகழ்காலத் தன்மையுணர்வு எம்மை தூண்டி நிற்கின்றது.

பன்முகத்தன்மையில் சமயங்களின் சமநிலையில் உள்ளடங்கிய ஓர் ஆரோக்கியமான வாழ்வு, இன்று அரசியல் தேவைகளை உள்ளடக்கிய தாக மாற்றம் பெறுவது துர்ப்பாக்கியமானதொன்று. இது மதங்களின் ஒற்றுமைத்தன்மையைக்கூட அவ்வவ் மத புத்திஜீவிகளின் வெறி கொண்ட சமயத்தின் பக்தியுணர்வு உடைக்க விளைவது ஆபத்தான விடயமும் கூட. இந்நிலையில், உயர்ந்த நோக்கமுடைய சமயங்களின் அடிப்படைத் தன்மைகள் இத்தகைய சூழலில் தடுமாறுகின்ற நிலைக்கு சமயங்கள் வழிகோலுகின்றனவா? என சிந்திக்கத் தூண்டுகின்றது.

எனவே இலங்கை மக்களின் ஒற்றுமையான, ஆரோக்கியமான சமூக வாழ்வுக்கு சமயங்கள் உயரிய பங்களிப்பை வழங்கலாம். அதாவது சமயங்கள் தங்களின் தனித் தன்மையை, தங்களின் வாழ்வு விழுமியங்களோடு விலகாது ஒழுகுகின்ற அதேவேளை தங்களோடு வாழுகின்ற மதங்களையும் அவர்களின் தனித்தன்மையையும் மதித்து வாழுகின்ற மனப்பக்குவம் மதங்களுக்கிடையிலான உரையாடல்கள் மூலமாக சாத்தியமாகும். இதுவே இலங்கையில் சமரசமான உறவுள்ள வாழ்வுக்கு வழிகோலும். அதன் தேவை இன்று அதிகமாகவே காணப்படுகின்றது.

## *உரையாடலுக்கு அடிப்படை உறவு*

உரையாடல் என்பது உறவு. இது முழு மதங்களின் அடிப்படையான நம்பிக்கை. "இறைவன் உறவால் வாழுகின்றார்." இது சித்தாந்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட எனவே அவ்வுறவின் சாயலாகவே மனிதனும் உருவாக்கப்பட்டான் (ள்) / படைக்கப்பட்டான்(ள்). இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உரையாடல் வெறும் உறவாக மட்டும் பார்க்கப்படாமல் இவ்வுறவை சிறப்பாக வளர்ப்பதே உரையாடலின் நோக்கமுமாகும்.

கிறிஸ்தவ விசுவாசத்தில் மீட்பு வரலாறு முழுவதுமே இறை – மனித உரையாடலாகத்தான் பார்க்கப்படுகின்றது. இதை திருத்தந்தை 6ம் சின்னப்பர் "அவரவர் திருச்சபையில்" (Ecclesia suam) என்னும் மடலில் குறிப்பிட்டுக்காட்டுகின்றார்.

### *சமயங்களின் சமநிலைப்பாடு*

மனிதம் முழுமையடைவதற்கு இறைவன் அளித்துள்ள அருங் கொடைதான் சமயம். மனிதனிடம் உள்ள தீமையை கட்டுப்படுத்தி அவனுள் உணரப்படாதிருக்கின்ற தெய்வீகத்தன்மையை மிளிர வைப்பது தான் ஒவ்வொரு சமயத்தின் நோக்கமாகும். "ஒவ்வொரு சமயமும் மானிட வரலாற்றில்தான் எழுந்துள்ளது என்றவகையில் எல்லா சமயங்களும் ஒருமைப்பாட்டைக் கொண்டுள்ளது" என்கிறார் அகிம்சைவாதி மகாத்மா காந்தி. அவ்வாறு பல சமயங்கள் இறைவன் ஒருவனையே ஊற்றாகக் கொண்டு உருவானவை. மரத்தின் கிளைகள் உருவத்திலும் பருமனிலும் பல பல திக்குகளை நோக்கி வளர்ந்தாலும் ஒரே அடிமரத்தை ஆதாரமாகக்கொண்டு, ஒரே உயிர்ச்சத்தைப் பெற்று உயிர் வாழ்கின்றன. அவ்வாறே சமயங்களிலும் ஒரே இறைவன் என்னும் ஆற்றலினால் உயிர் பெற்றோங்கி வலிமை பெறுகின்றது என்பது வெள்ளிடைமலை. ஆகவே சமயங்களின் தனித்தன்மையை மதித்து அவைகள் சார்ந்த திருநூல்களை ஆழ்ந்து தியானித்து உண்மையை அறியும் உள்ளத்தோடு அணுகுகின்ற போது இந்த ஒருமைப்பாட்டை கண்டுகொள்ளலாம் என்பது எனது கருத்து. இதை உணர்ந்து கொண்டால்தான் நாம் பிற சமயத்தவருடன் உண்மையான உறவை வளர்க்க முடியும்.

### *தனித்தன்மையில் சமயங்களின் வேறுபாடு*

அனைத்து சமயங்களும் ஒருமைப்பாடுடையவை என்பதற்காக அவைகளின் வேறுபாடுகளை உதறித் தள்ளிவிட முடியாது. ஒவ்வொரு சமயத்தின் தனித்துவத் தன்மையை நாம் ஏற்றுக் கொள்வது யதார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். அவ்வேறுபாடுகள் அனைத்துமே சமூகத்தின் இன்றியமையாத கூறுகள். ஏனெனில் மனிதனுக்கு அருளப்படும் இறை ஏவுதலும் அருள் ஒளியும் ஒன்றுதான்; ஆனால் அதை ஏற்கும் மனிதர்கள் பலராய் இருப்பதனாலும் அவர்களுடைய உளப்பாங்கும் ஏனைய பண்புகளும் வெவ்வேறாக இருப்பதனாலும் அவரவர் நிலைக்கு ஏற்றாற்போல் பல்வேறாகப் புரிந்து கொள்ளும் இயல்புடையவர்களாகத் தான் இருக்கின்றார்கள். இறைவெளிப்பாடு ஏகமாக இருந்தாலும் அதை ஏற்கும் மனிதரின் பார்வையில் குறைபாடுடையதாகத்தான் தோன்றுகின்றது. இறைவன் தருகின்ற வெளிப்பாடு நிறை உண்மையானது. அந்த உண்மையை குறைபாடுகளோடு தான் பெறுகின்றார்கள். மனிதனால் நிறுவப்படுகின்ற எதுவும், அதாவது அவனது கரம்படுகின்ற எதுவும் குறைபாடுள்ளதாகத்தான் இருக்க முடியும். ஆனால் ஒவ்வொரு சமயமும் நிறைவான உண்மையைக் கொண்டிருக்கின்றன. இவ்வுண்மையை நோக்கி மேற்கொள்ளும் பயணத்தில் எல்லாச் சமயங்களுமே இணைந்து பங்காற்றுகின்றன. எத்தனையோ வேறுபாடுகளை சமயங்கள் கொண்டிருந்தாலும் இறை தேடலில் எல்லா சமயத்திற்கும் உரிய உயரிய பண்பு இதில் சமன்பாடு கொண்டதாக மாறிவிடுகின்றது.

மேற்கூறிய முறையில் அனைத்து சமயங்களுமே சமன்பாடு உடையவை என்று புரிந்து கொண்டால் மட்டும் போதாது. மாறாக இந்த யதார்த்தமான உண்மையை உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு எல்லாச் சமயங்களுக்கும் சம மரியாதை கொடுத்து, மதித்து, போற்றக்கூடிய சமநிலைக் கண்ணோக்கைக் கைக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு சமயமும் அந்தந்த சமயத்தவர்களுக்கு மீட்பை அளிக்கின்ற, இறையொளி தருகின்ற அருட்சாதனமாக இருக்கின்றது என்பதை ஏற்று சக சமயத்தவர் களிடம் அன்போடும் பண்போடும் நடந்து கொள்ளும் மனப்பக்குவத்தையும் கொண்டுள்ளது. இந்த மதச்சார்பு வெளிப்படுகின்ற பழக்கவழக்கம் நிறைந்த வாழ்க்கை முறை அவசியமானதொன்றாகும். இதைத்தான் மகாத்மா காந்தி, "சமன் நோக்கு பண்பாடு" என வகுக்கின்றார். இப் பண்பாடு வளர முதலில் சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறரை மதித்து நடத்தும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய சமயச் சடங்கு முறைகள், அதைப் பின்பற்றும் பலருக்கு மீட்பின் சாதனமாக இருக்கின்றது என்பதை புரிந்து கொண்டு அவர்களிடமிருந்து அதன் உட்பொருள் தெரிந்து கொள்வது இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சமயங்களின் தனித்தன்மையை மதித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவற்றின் குறைபாடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அர்த்தம் கொள்ளல் தவறு. இது குறைகாண் நிலையை ஏற்படுத்துமாகில் அது ஒற்றுமையை குலைத்து விடும். மாறாக, சகிப்புத் தன்மையின் தெளிவான நோக்கோடு அணுகுதல் சாலச்சிறந்தது. அப்போது சீரான சமய உறவு வலுப்பெறும். இதன் மூலம் சமுதாயத்தில் தென்படும் வன்முறைகள், தேவையற்ற வெறுப்பூட்டக்கூடிய சித்தாந்தங்கள் வலுவுள்ள சமய உரையாடலோடு தெளிவடைந்து இறையரசு இனிதாக மலர உழைக்க முடிகின்றது.

### *சமய உரையாடல் காலத்தின் சவால்*

சமய உரையாடல் என்பது மறையறிவிப்புப் பணியில் நாம் கொண்டிருக்கும் ஆர்வத்தைக் குறைத்துவிடும் என்று நோக்கலாகாது. உண்மையிலே இது மறையறிவிப்புக்கான ஆர்வத்தை தூண்டுகின்றது. எனவேதான் வத்திக்கான் சங்கம் மறையறிவிப்பின் பாகமாக பல்சமய உரையாடலின் தேவையை முன்னிறுத்தி அதற்கான செயற்பாடாக நல்லெண்ண அடிப்படையில் பிற சமய விழாக்களுக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்பத் தொடங்கியது. ஆகவே சமய உரையாடல் என்பது சகிப்புத்தன்மை அல்லது சமரச மனப்பான்மை மட்டுமல்ல, மாறாக அது பொது நம்பிக்கையில் தூண்டப்பட்டு ஒன்றிப்பு உறவிற்கும் ஒத்துழைப் பிற்கும் நம்மை அழைக்கும் ஆழ்ந்த உறவாகும். பிற மதங்களின் இறைப்பற்றை ஆழ்ந்து அறிந்து நமது நம்பிக்கையை அவர்கள் வாழும்படி செய்யும் வாதமே உரையாடல். இது எல்லாருக்கும் வளர்ச்சியளிக்கின்றது. இறை நம்பிக்கையுள்ளோர் அனைவரும் காணும் ஒன்றிப்பு உறவில்தான் மனித மாண்பையும் மதிப்பையும் காக்கும் சமுதாயம் விழித்தெழ முடியும் வளரவும் முடியும்.

### *இலங்கையின் உயரிய வரம்புக்கு உரையாடலும் உறவும் அவசியம்*

இலங்கை ஒரு சமயச் சார்பற்ற பன்முகத்தன்மை கொண்ட நாடு. எல்லாச் சமயங்களையும் சமமாகவே நோக்குகின்றது. ஆனால் நடைமுறையில் அரசியலும் சமயமும் ஒன்றையொன்று தழுவிக்கொள்ளும் அபாயகரமான நோக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வருவது தெளிவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு விடயம். சுயநல அரசியல்வாதிகள் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி எவ்வகையிலும் ஆட்சியைப் பிடிப்பதற்காக சமயத்தைப் பயன்படுத்தியுள்ளார்கள் பயன்படுத்துகிறார்கள் என்பது வரலாற்றினூடே கண்கூடு. அரசியல்வாதிகளின் வஞ்சக உள்ளத்தையும் கபட நாடகத்தை யும் இனம்கண்டு கொள்ள முடியாத சாமானிய மக்கள், சமயத்தின் பெயரால் வெறியூட்டப்படுவது தெளிவான விடயம். இதன் விளைவாகவே இனப் பகைமை உணர்வு தூண்டப்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை.

இலங்கையில் வெடித்த கலவரங்கள், உள்நாட்டுப் போர் என்பவற்றை ஆய்வு செய்தால் காலம் நமக்கு பதில் சொல்லும். ஏனெனில் இழந்த அடையாளங்களின் தேடலில் அடிப்படைவாத சிந்தனைப் போக்குகளுக்கு இரையாவது எளிதான விடயம். ஓர் இனம் வளர்ச்சி பெறுவதைக் கண்டு காழ்ப்புணர்வு கொள்வோர் சமயத்தைப் பயன் படுத்துவதில் வியப்பேதுமில்லை. எனவே சமயத்தைப் பயன்படுத்தி அவர்களின் ப(ழி)சி தீர்க்க விளைகின்றார்கள். இதன் விளைவு: கடத்தல்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், விதவைகளாக்கப்படுதல், கல்விச் சுதந்திரமின்மை, அகதி வாழ்வு, திட்டமிடப்பட்ட இனச்சுத்திகரிப்பு, சுய நிர்ணய மறுப்பு, கொலை, கொள்ளை என எழுதிக்கொண்டே போகலாம்.

வன்முறையையும் கலவரத்தையும் தோற்றுவிக்கும் கருவியாக சமயங்கள் பயன்படுத்தப்படுமென்றால் இலங்கையின் எதிர்காலம் கேள்விக்குரியதாகிவிடும். ஏனெனில் இலங்கையின் எதிர்காலமே சமய உறவில் எழும் ஒரு வலுவுடைய சமுதாயத்தின் பார்வையிலேயே இருக்கின்றது என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு வலுவுள்ள சமுதாய உருவாக்கலுக்கு மதங்களுக்கிடையிலான உரையாடல் காத்திரமான பங்களிப்பை கொடுக்க முடியும் என்பதை ஆசிய ஆயர் மன்ற கூட்டமைப்பு (FABC) முன்வைப்பதை இங்கு நினைவில் கொள்ள விளைகின்றேன். அதாவது வாழ்க்கை முறை மட்டத்தினான உரையாடலுக்கு அதன் தேவையும் அத்தியாவசியமாக பார்க்கப்படுகின்றது. அடுத்ததாக பொதுச் செயற்பாடுகளில் இணைந்த உரையாடல், அதாவது சமூக, பொருளாதார அரசியல் சார்ந்த பொது விடயங்களில் ஆர்வமும், காலநிலை மாற்றமும் மனித உரிமை சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் ஈடுபாடுகளை விழிப்புணர்வோடு ஊக்குவிக்கும் விடயமாகவும் இறுதியாக சமயங்களுக்குள்ளே ஒற்றுமைத் தன்மையையுள்ளடக்கிய விடயங்கள் பற்றிய ஆய்வு பட்டறைகளை உருவாக்கி தேடலை உருவாக்க உரையாடல் இன்றியமையாததாக பார்க்கப்படுகிறது. இப்படியான உரையாடல் ஓர் ஆரோக்கியமான சமூக வலுவுள்ள வாழ்வை உருவாக்கும் என்பதை தெளிவாக்கியுள்ளது. எனவே இத்தகைய எண்ணப்பாடுகளைக் கொண்டு ஓர் இணக்கப்பாட்டுடன் சமயங்களிடையே நல்லிணக்கமும் நட்புறவும் என்று மலர்கின்றதோ அன்றுதான் இலங்கை ஓர் அமைதியான பன்முகத்தன்மையின் அடையாளத்தை சுதந்திரமாக வெளிக்காட்டுகின்ற சொர்க்க பூமியாக மாறும்; மதங்களின் உறவுப் பாலம் இறையாட்சியாக மாறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையும் திருச்சபைகளும்

அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன்
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

"ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருச்சபையையும் விசுவசிக்கிறேன்." இது ஞாயிறு தோறும் நாம் அறிக்கையிடுகின்ற நிசேயா கொண்ஸ்தாந்திநோபிள் (381) விசுவாச அறிக்கையின் ஒரு பகுதி. இங்கு குறிப்பிடப்படும் ஒற்றுமை, தூய்மை, பொதுத்தன்மை, திருத்தூதுத்தன்மை ஆகிய நான்கு விடயங்களையும் திருச்சபையின் முக்கிய நான்கு பண்புக ளாக, அடையாளங்களாக திருச்சபையின் பாரம்பரியம் குறிக்கின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் இப்பண்புகளை "கிறிஸ்துவின் திருச் சபைக்கு" உரிய பண்புகளாக அடையாளம் காணுகிறது (தி.எண் 8). இப்பண்புகளுள் ஏகம் அல்லது ஒருமை அல்லது ஒற்றுமை என்று அழைக்கப்படும் பண்பு தொடர்பாக திருச்சபையில் காணப்படும் பிளவுகளின் பின்னணியில் சில ஆய்வுக் குறிப்புகளை முன் வைக்க இக்கட்டுரை முயல்கிறது.

## *திருச்சபையில் பிளவுகள்*

தொடக்கத் திருச்சபையில் இருந்தே திருச்சபையில் பல வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. ஆயினும் வேறுபாடுகள் அனைத்தும் பிளவில் சென்று முடியவில்லை. பல வேறுபாடுகள் ஆரோக்கிய மானவையாக திருச்சபைக்கு அழகு சேர்ப்பவையாக அமைந்திருக்கின்றன. வேறுசில வேறுபாடுகளும், முரண்பாடுகளும், கருத்து மோதல்களும் பிளவுகளில் சென்று முடிந்திருக்கின்றன. அந்த வகையில் மரியாளை இறைவனின் தாய் என அழைத்த பின்னணியில் (431) அசீரியன் திருச்சபை உருவானது. மேலும் கால்செதோன் சங்கத்தின் பின் (451) கொப்டிக், சிரியன், ஆர்மினியன், எந்தியோப்பியன், எரித்திரியன், மலங்காரா யக்கோபைற் போன்ற ஆறு சபைகள் உருவாகின. மேலும் 1054இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத்தேய மேலைத்தேய பிளவுகள் ஏற்பட்டன. 16ம் நூற்றாண்டில் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்களின் விளைவாக மேலைத்தேய சீர்திருத்த சபைகள் தோன்றின. இறுதியாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய அடிப்படைவாதத்தின் பின்னணியில் பல்வேறு சுயாதீன சபைகள் தோற்றம் பெறத் தொடங்கின. இவ்வாறு கிறிஸ்து உருவாக்கிய ஏக திருச்சபை இன்று பல்வேறு சபைகளாக பிளவுபட்டு காணப்படுகின்றது. இத்தகைய பிளவுகளால் கிறிஸ்துவின் திருச்சபையின் ஒருமை என்கின்ற பண்புக்கு சவால் விடுக்கப்பட்டதால்தான் நாம் கிறிஸ்தவ ஒன்றிப்பைப் பற்றிப் பேசுகின்றோம்.

கிறிஸ்துவின் திருச்சபைக்குரிய ஒருமை என்கின்ற பண்புக்கு எதிரானவையாக இதிற் சொல்லப்பட்ட பிளவுகளை மட்டும் கருதுவது ஒரு குறுகிய பார்வையாகவே அமையும். ஏனெனில் ஒவ்வொரு சபைக்குள்ளும்கூட ஒருமைக்கெதிரான பல்வேறு பிளவு நிலைகளையும் நாம் அவதானிக்கலாம். எமது மறைமாவட்டத்தில் காணப்படுவதைப்போல ஆலயத் திருச்சபைகள் சாதிய அடிப்படையில் பிளவுபட்டிருப்பது, ஏனையோரை வரவேற்க மறுப்பது போன்ற விடயங்கள் திருச்சபையின் ஏகம் மற்றும் கத்தோலிக்கம் ஆகிய பண்புகளுக்கு எதிரானவையே. ஓர் உயர்ந்த பட்ச குழும வாழ்வை வாழ முயலும் சபைகளிலேயே ஒருமை என்கின்ற பண்பு உயர்வாக இருக்க முடியும் என்று நாம் சிந்திக்கலாம். எல்லா விதமான பிளவுகளும் திருச்சபையின் ஒருமைக்கு எதிரானவையே. கிறிஸ்துவின் திருச்சபை ஒன்று என்கின்ற வகையில் அனைத்துப் பிளவுகளும் ஒற்றுமைக்கான அவசியத்தையும் அவசரத்தையும் சுட்டி நின்று ஒன்றிப்புக்காக உழைக்க நம்மை அழைக்கின்றன.

### *திருச்சபையும் திருச்சபைகளும்*

தூய பவுல் தனது மடல்களில் திருச்சபையைப் பற்றிப் பேசுகிறார். "கடவுளின் திருச்சபைகள்" (1கொரி1:1-16, 2தெச 1:4), "புறவினத்தவருடைய திருச்சபைகள்" (உரோ16:4), "கிறிஸ்துவின் திருச்சபைகள் அனைத்தும்" (உரோ16:16). இவ்வாறு பல்வேறு தலத்திருச்சபைகள் பற்றிப் பேசும் பவுல் அடிகளார் தமது எபேசியர் மற்றும் கொலோசியருக்கான மடல்களிலே "ஒரு திருச்சபை" பற்றியும் பேசுகிறார். இவ்வாறு தொடக்கத் திருச்சபையிலே பல்வேறு இடங்களிலே தமக்கே உரித்தான தனித்துவங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு வாழ்ந்த திருச்சபைகள் தமக்குள் கொண்டிருந்த பொது விடயங் களின் காரணமாக ஒரு திருச்சபையாக உணர்ந்தமை புரிந்து கொள்ளப் பட்டன. "ஒரே ஆவி, ஒரே நம்பிக்கை, ஒரே அழைப்பு, ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு, ஒரே கடவுள், ஒரே தந்தை" (எபே 4:4-6) "அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் பங்கு கொள்கின்றோம்" (1கொரி 10:16-17). ஆகவே பொதுப் பண்புகளால் ஒரு திருச்சபையாகவும் தனித்துவங்களால் பல திருச்சபைகளாகவும் திகழ்வது சாத்தியமானது என்பதை தொடக்கத் திருச்சபையின் சூழல் எமக்கு தெளிவாக விளக்குகிறது.

***கிறிஸ்துவின் ஒரே திருச்சபை***

திருச்சபையின் ஒருமை அதனது அடிப்படை நம்பிக்கையில் தங்கியிருக்கின்றது. ஒரே இறைவனை நாம் விசுவசிக்கின்றோம் (இணை 6:4-6; மாற் 22:29; கலா 3:20). ஒரே ஆண்டவர், மீட்பர், இயேசுக்கிறீஸ்துவை விசுவசிக்கின்றோம். (தி.பா 4:12 எபே 4:5) ஒரே ஆவியை விசுவசிக் கின்றோம். இவ்வாறு விசுவாச ஒருமையிலிருந்து திருச்சபையின் ஒருமை பிறக்கிறது.

"தன்னுடைய ஊற்றின் காரணமாக திருச்சபை ஒன்றாக இருக்கிறது. தந்தை, மகன், தூய ஆவியாகிய, மூவொரு இறைவனில் கொண்டுள்ள விசுவாசமே திருச்சபையின் ஒருமையின் உதாரணமாகவும், ஊற்றாகவும் திகழ்கிறது" என்று கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு, எண் 813, குறிப்பிடுகிறது. உண்மையில் மூன்று ஆட்களாகவும் அதே வேளையில் ஒரே இறைவனாகவும் திகழும் மூவொரு இறைவனின் மறை பொருளிலே பல்வேறு தனித்துவத்தோடு திருச்சபைகளாகத் திகழும் அதே வேளையில் ஒரே திருச்சபையாகவும் திகழும் திருச்சபையின் மறை பொருள் வெளிப்படுகிறது.

திருச்சபையின் பார்வையில் ஒருமை என்னும் பண்பு ஒத்த தன்மையயல்ல ஆனால் ஒற்றுமையையே குறிக்கிறது (தி.எண்:4; கி.ஒ.எண்:2). தொடக்கத்திலிருந்தே திருச்சபை பெரும் பன்மைத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. இது இறைவனின் கொடைகளின் பன்மைத் தன்மையையும் அவற்றைப் பெறும் மனிதர்களின் பன்மைத் தன்மையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துக்காட்டுகிறது. இறை மக்கள் என்னும் ஒன்றிப்பின் கீழ் பல்வேறு பண்பாடுகள், மக்களினங்கள் என்னும் பன்மைகள் இணைகின்றன. திருச்சபையின் உறுப்பினர்களிடையே பல்வேறு கொடைகள், பணிகள், சூழ்நிலைகளின் வாழ்க்கை முறைகள் என்பன காணப்படுகின்றன. இத்தகைய பல்வேறுபட்ட செயல்கள் திருச்சபையின் ஒருமைக்கு ஒருபோதும் எதிரானவையல்ல. ஆயினும் பாவம் திருச்சபையின் ஒருமைக்கு எதிராக செயற்படும் என்பதனால் எப்போதும் விழிப்போடு ஒன்றிப்புக்காக உழைக்க வேண்டும். இவ்வாறு கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு உணர்த்துகிறது (814). மேலும் அந்த ஒன்றிப்பின் முக்கிய அம்சங்களாக பின்வரும் மூன்று விடயங்களையும் அவ்வேடு அடையாளம் காண்கிறது

1. திருத்தூதர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட விசுவாச அறிக்கை
2. பொதுவான திருவழிபாடு, குறிப்பாக, அருள் அடையாளங்கள்
3. திருப்பட்ட அருட்சாதனத்தின் வழியாக பேணப்படும் திருத்தூதர் தொடர்ச்சி இது இறைகுடும்பத்திற்குரிய சகோதரத்துவத்தைப் பேண அவசியமாகிறது (தி.எண்.14; கி.ஒ.எண்.3; க.ம.ஒ. 815).

வெவ்வேறு திருச்சபைகளுள் இம்மூன்று அடிப்படை விடயங்களிலும் ஏற்படும் உடன்பாட்டிற்கு ஏற்ப ஒன்றிப்பின் நெருக்கமும் அதிகரிக்கும். சபைகளுக்கிடையில் நடக்கும் உரையாடல்களில் மேற்படி விடயங்களில் நெருக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

### *தூய அகஸ்தீனாரின் விளக்கம்*

டொனற்றிஸ்ட் பிரிவினைக்கு எதிராக கடுமையாக உழைத்த தூய அகஸ்தீன் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு திருவிவிலியத்தில் காணப்படும் தூய ஆவியின் வெளிப்பாடுகளின் அடிப்படையில் விளக்கம் அளிக்க முயல்கிறார். இயேசுவின் திருமுழுக்கு வேளையில் புறா வடிவில் இறங்கிய (மாற்.1:10) அதே தூய ஆவியார்தான் திருத்தூதர்களின் மேல் பிளவுண்ட அக்கினி நாக்குகளாக இறங்குகிறார் (தி.தூ.2:3). அக்கினி நாவுகளாக பிளவுண்ட ஆவியார் புறாவாக ஒன்றாயிருக்கிறார். அது போல் திருச்சபையின் பன்மைத் தன்மையில் வேறுபட்டிருந்தாலும் ஒன்றிப்பினால் ஒன்றாயிருக்கின்றன. இதன் மூலமே திருச்சபை மனுக் குலத்தின் ஒற்றுமைக்கான அடையாளமும் கருவியுமாக திகழ்கின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தி.எண்:1). ஒத்த தன்மையையே எப்போதும் நாடாது ஒருமித்த தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வரும் போது மட்டுமே கிறிஸ்தவ ஒன்றிப்பை நிஜமாக்க முடியும்.

***கிறிஸ்தவ ஒன்றிப்பின் முயற்சிகள்***

பணித்தளங்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் எதிர் சாட்சிகளின் பின்னணியில் உருவான கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகள் உலகத் திருச்சபைகளின் பேரவை தோற்றம் பெறக் காரணமாக அமைந்தன. கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சியில் கத்தோலிக்க திருச்சபை ஆரம்பத்தில் பெரும் ஈடுபாடு காட்டவில்லையாயினும் அதனது தேவை உணரப்பட்ட ஒன்றாகவே இருந்தது. கத்தோலிக்க திருச்சபையினுள் ஆரம்பித்த கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினுள் நுழைந்தபோது சங்கம் தனது திருச்சபை பற்றிய மறைக் கொள்ளை திரட்டிலும் (குறிப்பாக எண்.8) கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித் தொகுப்பிலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகளுக்கு அங்கீகாரமும் ஊக்கமும் அளித்தது. கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய விதித்தொகுப்பின் 40 ஆண்டுகளின் நிறைவில் 2004ல் கத்தோலிக்க திருச்சபையில் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய ஓர் ஆய்வை கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான திருத்தந்தையின் பேரவை மேற்கொண்டது. அதன் அடிப்படையில் கத்தோலிக்கத் திருச்சபை ஏனைய திருச்சபைகள் மட்டில் கொண்டிருந்த கண்டனப்போக்கு பெருமளவு குறைந்திருப்பதும் ஒன்றிப்பின் அவசியம் மேலும் மேலும் உணரப்படுவதும் கண்டறியப் பட்டுள்ளது. கிறிஸ்தவ ஒன்றிப்பு நிகழ்வுகளும் பொது இறை வேண்டல் கூட்டங்களும் அதிகம் ஒழுங்கு செய்யப்படுவது அவதானிக்கப் பட்டது.

அதே வேளை பரஸ்பர சந்தேகம், ஒருவர் மற்றவரை விமர்சிக்கும் போக்கு போன்ற சவால்களும் அடையாளம் காணப்பட்டன. மேலும் எதிர்கால செயற்பாட்டுக்கென மூன்று முக்கிய விடயங்களும் அடையாளம் காணப்பட்டன:

1. மறைமாவட்டங்களின் மேய்ப்புப் பணி செயற்பாடுகளுள் கிறிஸ்தவ ஒன்றிப்பின் முயற்சிகளை திட்டமிட்ட வகையில் இணைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய அறிவை பொதுநிலையினர், துறவிகள், குருமட மாணவர்கள், குருக்களுக்கு வழங்குதல்.
3. சபை மாற்ற முயற்சிகளை எவ்வாறு எதிர் கொள்வது என்பது தொடர்பான தேடல்.

சரியான கோட்பாட்டு தளங்களில் இருந்து கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விடயமும் ஆழமாக உரைக்கப்பட்டுள்ளது.

## *சில மேய்ப்புப்பணி சார் முன்வைப்புக்கள்*

குருமட மாணவர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஒரு கிறிஸ்தவ ஒன்றிப்பின் மனப்பாங்கில் வளர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அறிவுரீதியாக கிறிஸ்தவ ஒன்றிப்பைக் கற்றாலும்கூட பலர் அகத்தளவில் போட்டி மனப்பாங்கும் கண்டனப்போக்கும் கொண்டவர்களாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

சந்தேகங்கள் நேரடியாக பேசித் தீர்க்கப்படுவது அவசியம். கிறிஸ்தவ ஒன்றிப்பு வார செயற்பாடுகளுக்கு அப்பால் வருடம் முழுவதும் கூட்டு முயற்சிகள் வெவ்வேறு விடயங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பு அடையாளம் காணும் மூன்று நிலை உரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்

1. வாழ்க்கை நிலை உரையாடல்: அன்றாட நிகழ்வுகளில் நட்பையும் பரஸ்பர உறவு மனப்பாங்குகளையும் வளர்த்து பல்வேறு திருச் சபையினரிடையே சமூக மயமாதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. பொது விடயங்கள், பிரச்சனைகளை இணைந்து எதிர் கொள்ளல்: மனித உரிமை மீறல்கள், சூழல் மாசடைதல் போன்ற பல்வேறு சமூகப் பிரச்சனைகள் இணைந்து எதிர்கொள்ளப்படவேண்டும். இதற்கான அமைப்புகளையும் ஏற்படுத்த வேண்டும்.

3. ஆழமான ஆய்வுகளிலும் தேடல்களிலும் இணைந்து ஈடுபடுவது, இறையியல் ஆய்வு மையங்கள் இணைந்து உருவாக்கப்படுவது. இணைந்த கருத்தமர்வுகளை ஒழுங்கு செய்தல் போன்ற விடயங்களில் ஈடுபடுவது கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான அடித்தளங்களைப் பலமாக்குகிறன.

இவையெல்லாம் எமக்கு முன்னால் உள்ள தெரிவுகள் அல்ல, மாறாக கடமைகள். ஏனெனில் இயேசுவே "எல்லாரும் ஒன்றாக இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் என உலகம் நம்பும்" (யோவா.17:21) என்று செபிக்கின்றார்.

இயேசுவின் கட்டளைகளை நிறைவேற்றுவது அவரது உண்மைச் சீடர்களின் பொறுப்பு. முன்வருவோமா?

***உசாத்துணை நூல்கள்:***


Catechism of the Catholic Church

Saldanha, Peter Paul, The Church Mystery of Love and Communion, Urbaniana University Press, 2014

McBrien Richard, P., Catholicism, Harper San Francisco, New York, 1994.

http://www.vatican.va/roman_curia/pontifical_councils/chrstuni/documents/rc_pc_chrstuni_doc_20041121_farrell-ecumenismo_en.html







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு தரும் அடிப்படையான படிப்பினைகள்

அருட்சகோதரன் சே. ஜஸ்ரின்ராஜா, அ.ம.தி.
4ம் வருட இறையியல்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

***முன்னுரை***

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் "கிறிஸ்தவ ஒன்றிப்பு" (Unitatis Redintegratio) பற்றிய விதித்தொகுப்பின் கற்பித்தலுக்கு அமைவாக, கிறிஸ்தவ ஒன்றிப்பின் அவசியம் பற்றி நாம் சிந்திப்பது காலத்தின் கட்டாயத் தேவையாக இருக்கிறது. இக்கொள்கைத் திரட்டின் அடிப்படையான படிப்பினைகளின் தொடக்க முகவுரையில் குறிப்பிடப் பட்டுள்ளதைப் போல, "ஒற்றுமை" என்பது திருச்சபையின் இன்றியமையாத ஓர் இயல்புக்கூறாக அமைகிறது. கடவுள் ஒருவரே; அவர் மகன் இயேசுக்கிறிஸ்துவும் ஒருவரே; திருச்சபை ஒன்றே; அதன் நம்பிக்கையும் ஒன்றே. ஆனால், இன்று கிறிஸ்தவக் கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், ஆட்சி அமைப்புக்கள், செயற்பாடுகள் என்பவற்றில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு பிளவுபட்டு நிற்பதோடு, திருச்சபைக்குள்ளேயே பலவேளைகளில் அவை ஒன்றுக்கொன்று முரணாகவும் எதிராகவும்கூடச் செயற் படுகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கிறிஸ்தவத்தின் இந்த பிளவுபட்ட நிலை அதன் உண்மை இயல்பிற்கும் உயரிய நோக்கத்திற்கும் மேலாக அதை நிறுவியவரின் விருப்பத்திற்கும் முரணானதாக அமைகிறது. அனைத்து மக்களும் ஒரே இறை தந்தையின் பிள்ளைகள் எனும் உண்மைக்கு "திருச்சபை" ஓர் அடையாளமாக அமைகிறது. அது அனைத்து மக்களையும் ஒரே குடும்பமாகச் சகோதர உறவுடன் வாழப்பணிக்கும் கடவுளின் கருவி. இவ்வாறு அனைவரின் ஒற்றுமைக்கும் சகோதர உறவிற்கும் சிறந்த ஒரு சின்னமாகவும், செயல்திறமுள்ள கருவியாகவும் விளங்கவேண்டிய கிறிஸ்தவமே தன்னுள் பிளவுபட்டு ஒற்றுமையில்லாதிருப்பது, அதன் இயல்புக்கு எதிரானது. மேலும், கிறிஸ்தவத்தின் பிளவுபட்ட இந்நிலை அதன் நற்செய்தி அறிவுப்புப் பணிக்கு ஒரு பெரும் தடையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகிறது. எனவே, சவால்களைத் தாண்டி பயணிக்கும் கிறிஸ்தவம் உண்மையான ஒருமைப்பாட்டிற்கும், சாட்சிய வாழ்வுக்கும் உயிர் கொடுக்க உண்மைக் கிறிஸ்தவர்க்காய் ஏங்கித் தவிக்கிறது.

***வரலாற்றுப் பார்வை***

"கிறிஸ்தவ" ஒன்றிப்பு பற்றிய அழுத்தம் வெறுமனே நாம் வாழும் இந்த நவீன காலத்தில் மட்டும் வலியுறுத்தப்படுவதொன்றல்ல. மாறாக, கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றி நேரடியாகக் குறிப்பிடப்படவில்லையென்றாலும், இதன் கருத்து புதிய ஏற்பாட்டிலேயே துவங்குவது அதன் பழமையினைத் தெளிவுப்படுத்துவதாக அமைகிறது. அதாவது, "எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவா.17:21) என இயேசு செபிப்பது கிறிஸ்தவ சமூகங்கள் பிளவுபட்டு காணப்பட்டன என்பதனை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. "சகோதர சகோதரிகளே... உங்களிடையே பிளவுகள் வேண்டாம்; ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள்" (1கொரி 1:10) எனும் புனித பவுலின் வார்த்தைகளும் கிறிஸ்தவத்தின் பிளவுபட்ட தன்மைக்கு ஒரு நற்சான்றே எனலாம்.

தொடக்க கிறிஸ்தவ சமூகத்தில் பல தலத் திருச்சபைகள் இருந்தன. ஆனால் அவற்றில் வேறுபாடுகள் இருந்த போதிலும், நம் மூதாதையர் ஒற்றுமையோடு ஒளிவீசி வாழ்ந்தார்கள். இந்த ஒற்றுமை பிளவுபட முக்கிய காரணமாக அமைந்தது, வேற்றுமைகளின் தனித்தன்மைகள் மறுக்கப்பட்டு, இருட்டடிப்புச் செய்யப்பட்டு, ஏகம் என்ற ஒற்றைத்தன்மையை மேல்வரிச்சட்டமாக, கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் அடிப்படையாகக் கொண்டதேயாகும். இவ்வாறு, திருஅவையிலே பிளவுகள் வலுப்பெற்றன. எகிப்திய அல்லது கோப்டிக் திருஅவை, எத்தியோப்பிய திருஅவை, அர்மீனியத் திருஅவை, அந்தியோக்கியத் திருஅவை என பிளவுபட்டு நின்றது. இதற்கு கிறிஸ்தியல், மரியியல், ஆவியியல் போன்ற கோட்பாடுகளும் அவற்றின் பெயரால் எழுந்த தப்பறையான கொள்கை களும் காரணிகளாக அமைந்தன. கோட்பாட்டு முரண்பாட்டால் ஏற்பட்ட பிளவுகளைவிட 11ம் நூற்றாண்டில் உரோமைக்கும் கொண்ஸ்தான் தினோப்பிளுக்கும் இடையே அரசியல், மொழி, பண்பாடு, வழிபாடு, இறையியல் போன்ற தளங்களில் ஏற்பட்ட வேறுபாடுகளின் பின்னணியில் கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட கிரேக்க சபை, உரோமை சபை அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கத்தேய மற்றும் மேற்கத்தேய கிறிஸ்தவ பிரிவினைகள் மிகப்பெரியது மட்டுமன்று, அது நிரந்தரமாக இன்றுவரை நிலைப்பதும்கூட.

அத்தோடு, 1ம் நூற்றாண்டில் மேற்கத்திய கத்தோலிக்கத் திருஅவையில் ஏற்பட்ட பிளவு பல்வேறு சீர்த்திருத்த சபைகளை தோற்றுவித்தது. கத்தோலிக்கத் திருஅவையில் காணப்பட்ட இறுக்கமான சூழ்நிலை, இதனால் மாற்றுச் சிந்தனைகளை ஊக்கப்படுத்தாமை, ஒற்றைக் கலாச்சாரத்தையே முன்னிலைப்படுத்தியமை, ஒற்றை மொழியே இறைமொழி என முழங்கியமை, பன்மையை மறுத்தமை, படிநிலை அமைப்பு அதிகாரத்திற்கு அழுத்தம் கொடுத்தமை போன்ற பல காரணங்களினால், இவற்றிற்கு மாறாக சமயச் சுதந்திரத்தையும் தனிமனித இறையனுபவத்தையும் வலியுறுத்தியதோடு, சமயத்தலைவர்களின் அதிகாரத்தைவிட இறை அதிகாரமே மேலானது, இறைவார்த்தையே எல்லாவற்றிற்கும் மேல்வரிச்சட்டம் போன்ற கருத்தியல்களை முன்னிலைப்படுத்தி, மார்டின் லூதர், ஜான் கால்வின், உல்ரிட்ச் ஸ்விங்ளி ஆகியோரினால் சீர்த்திருத்த சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாறு காலப்போக்கில் இன்னும் பலநூறு சபைகள் தோன்றி பிளவுபட்டு நிற்பதே இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையாகக் காணப்படுகிறது.

### *கிறிஸ்தவ ஒன்றிப்பின் அடிச்சுவடுகள்*

16ம்நூற்றாண்டில் ஏற்பட்ட இவ்வாறான பிளவுகள் ஏறத்தாழ 20ம் நூற்றாண்டுவரை அழுத்தம் பெற்றிருந்தது. இக்கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே நான்கு நூற்றாண்டுகளாகப் பெரிதும் நிலவியது தங்களைப்பற்றிய பாதுகாப்புணர்வும் பிற சபைகள்பால் பகையுணர்வுமே. இந்த எதிர்வாதப் போக்கு 20ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்துதான் சிறிது சிறிதாகக் குறைந்து மறையத் துவங்கியது.

இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது 1910ம் ஆண்டு அங்கிலிக்க சீர்திருத்த சபைகள் இணைந்து நடத்திய அனைத்துலக நற்செய்தி அறிவிப்பு மாநாட்டிலிருந்து பிறப்பெடுத்த “கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் ஆகும். அத்தோடு,1908ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்'' (ஜனவரி 18-25) 1916ம் ஆண்டு திருத்தந்தை 15ம் பெனடிக்ற் அவர்களால் ஏற்கப்பட்டு கத்தோலிக்க திருச்சபை முழுவதற்கும் விரிவாக்கப்பட்டது. மேலும் 1947ம் ஆண்டு தென்னிந்தியாவில் உள்ள அங்கிலிக்கன்சபையும் பல சீர்திருத்த சபைகளும் சேர்ந்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய திருச்சபையாக ஒன்றிணைந்தன. 1948ம் ஆண்டு உலக பேரவை உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில் கத்தோலிக்கத்திருஅவை இந்த இயக்கத்தைவிட்டு முழுவதுமாக விலகி நின்றாலும் 1947ல் உரோமை நம்பிக்கை கோட்பாட்டு பேராயம் "ஒற்றுமை இயக்கம்" பற்றிய அறிவுரையை வெளியிட்டு சபைகளுடன் உறவுக்கும் உரையாடலுக்கும் வித்திட்டமை போன்ற முன்னெடுப்புக்கள் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான புதிய ஆர்வத்தையும் ஆழமான ஈடுபாட்டையும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்படுத்தின.

இம்முயற்சியில் முழு மூச்சாக செயற்பட்டவர் "கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை" என வர்ணிக்கப்படும் 23ம் யோவான் எனில் அதில் எவ்வித ஐயமுமில்லை. ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அவர் கிறிஸ்தவ ஒன்றிப்பில் தனிப்பெரும் அக்கறை காட்டினார். உரோமையில் ஒன்றிப்பு செயலகத்தை நிறுவினார். தமது எளிமை, இனிமை, மனத்தாழ்மை எனும் பண்புகளால் ஏனைய சபைக் கிறிஸ்தவர்களையும் சகோதரர்களாக அணைத்துக் கொண்டார். அவர் 2ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியபோது அதன் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக இருந்தது "கிறிஸ்தவ ஒன்றிப்பு" எனலாம். ஏனெனில், கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது ஆவியால் உந்தப்பட்டது என்பதை வத்திக்கான் ஏற்றுக்கொண்டது. எனவே, உலகளவில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முன்னெடுப்புக்கள் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீர்திருத்த சபைச் சகோதரர்களினால் தொடக்கப்பட்டாலும், இன்று நாம் காண்கின்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு மறுமலர்ச்சிக்கு 2ம் வத்திக்கான் சங்கம் தந்த படிப்பினைகள் முக்கிய பங்காற்றுகின்றமை போற்றுதற்கரியதொரு விடயமாகும். இவ்வாறு 2ம் வத்திக்கான் சங்கம் தரும் "கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு" கிறிஸ்தவ சபைகளிடையே ஒன்றிப்பின் ஒளிமயமான ஒரு புதுக்காலத்தின் தொடக்கமாக அமைகிறது.

### *கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு* (UR) *தரும் படிப்பினைகள்*

"கிறிஸ்தவர் அனைவரிடையிலும் ஒன்றிப்பு மீண்டும் ஏற்படுவதை ஊக்குவித்தல் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று" (கி.ஒ.1) என ஆரம்பிக்கும் இவ்விதித்தொகுப்பு, ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து நிறுவிய திருஅவை ஒன்றே என்பதை உறுதி செய்கிறது (காண்.கி.ஒ.1). சங்கம் வழங்கும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான கொள்கைகளை நோக்குகின்ற போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• உரோமையே மையம் என்ற அழுத்தம் மாற்றப்பட்டு, ஒன்றிப்பு இயக்கத்தின் மையம் கிறிஸ்துவே என்பது அழுத்தம் பெறுகிறது." ஒன்றாக இணைந்து திருச்சபைக்கு வளர்ச்சியளித்து, உயிரூட்டும் மிக முக்கிய கூறுகள்.....கத்தோலிக்த் திருச்சபையின் காணக்கூடிய எல்லைகளுக்கு வெளியிலும் இருக்க முடியும். எழுத்துவடிவம் பெற்ற இறைவாக்கு, அருள்வாழ்வு, நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு, தூய ஆவியின் பிற உள்ளார்ந்த கொடைகள், காணக்கூடிய கூறுகள் என்பன அத்தகைய நலன்களே. இவையெல்லாம் கிறிஸ்துவிடமிருந்தே வருகின்றன. அவரிடமே இட்டுச்செல்கின்றன: கிறிஸ்துவினது ஒரே திருச்சபையின் உரிமைச் சொத்தாக உள்ளன" (கி.ஒ.3).

• அத்தோடு மீட்பின் மறைதிட்டம் கத்தோலிக்கத் திருஅவையின் ஏகபோக உரிமை மட்டும் அல்ல மாறாக பிரிந்த சபைகளிலும் இது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நம்பியதோடு அவை மீட்பின் முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை என்று அறிக்கையிடுகின்றது.

• ஒரு மண்ணுலக நிறுவனம் என்னும் முறையில் "சீர்திருத்தம்" என்பது கத்தோலிக்கத் திருஅவைக்கு எப்போதும் தேவைப்படுவதோடு அது காலத்தின் கட்டாயம் என்பதை இவ்விதித்தொகுப்பு வலியுறுத்துகின்றது (காண்.கி.ஒ.6). எனவே சீர்திருத்தம் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு அடிப்படையாக அமைவதோடு கிறிஸ்தவ ஒன்றிப்பில் நம்பிக்கை கொண்டோர், அருட் பணியாளர்கள் என திருச்சபையில் அங்கம் வகிக்கும் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகிறது (காண்.கி.ஒ.5).

• எனவே மனமாற்றம் இன்றி உண்மையான கிறிஸ்தவ ஒன்றிப்பு இருக்க இயலாது. உண்மையான தன்னொறுத்தல், மனத்தாழ்மை, பணிசெய்வதில் நற்பண்பு, பிறரிடம் சகோதரப்பண்புடைய பெருந்தன்மை என்பவை அவசியம் என சங்கம் வலியுறுத்துகிறது (காண்.கி.ஒ.7).

• மூவொரு கடவுளின் செயற்பாட்டை அடிப்படையாகவும், கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும் கொண்டமைகின்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கங்கள் கத்தோலிக்க ஆயர்களின் வழிகாட்டுதல்களோடு நேர்மை, அன்பு, உண்மை, உடல் உழைப்பு போன்ற உயர்வான பண்புகளை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிப்புக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற சொற்கள், செயல்கள், பார்வைகள் என்பவற்றை களைவதற்கு பாடுபட வேண்டும்.

• மேலும் இறையியல் ஆராட்சியில் ஈடுபடல், உள்ளார்ந்த மனமாற்றம், மனித இருப்பையும் சமூகத்தின் வளர்ச்சியையும் கருத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்களாக தாழ்ச்சியும் சேவை மனப்பான்மையும் கொண்டிருத்தல், பிற சபைகளைப் பற்றிய ஆழ்ந்த அறிவு கொண்டிருத்தல், தகுந்த பயிற்சி, திருஅவையின் படிப்பினையில் உறுதியுடன் இருத்தல், உண்மையின் மீதுள்ள பற்றோடும் உள்ளார்ந்த அன்போடும் உரையாடக்கூடிய தன்மையைக் கொண்டிருத்தல், இறைவேண்டலில் ஒன்றித்தல், நற்செய்திப்பணி, நம்பிக்கை அறிக்கை, மற்றும் கடவுள் மீதும் இயேசுவின் மனுவுருவாதலின் மீதும் பொதுவான நம்பிக்கை இருப்பதால் கத்தோலிக் கரும் பிரிவினை சகோதரர்களும் ஒன்றித்து உழைக்கக் கூடியதாக இருத்தல் என பல்வேறு மனிதத் தன்மையுடனான அணுகுமுறைகள் கிறிஸ்தவ ஒன்றிப்பை வலுப்படுத்த அவசியமாகின்றன (காண். கி.ஒ 8-12).

- இவற்றோடு, ஒன்றிப்புக்கான முயற்சிகள் நேர்மையான நோக்கத்தோடு அமைதல், மறைமாவட்ட அளவில் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காக ஆணையத்தை அமைத்தல், சபைகளிடையே தாராள மனப்பான்மை இருத்தல், கிறிஸ்தவக் கல்லூரிகள், குருத்துவக் கல்லூரிகள், துறவியர் பயிற்சி நிலையங்கள், பிற உயர்தர கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான கல்வி வழங்கப்படல் போன்றனவும் அவசியம் செயற்படுத்தப்பட வேண்டியவையாக அமைகின்றன.

- அத்துடன் கீழைத்தேய திருஅவையும் மேலைத்தேய திருஅவையும் பல நூற்றாண்டுகளாக தனித்தனி வழியில் செயற்பட்டாலும், அருளடையாள வாழ்வில் ஒன்றுபட்டு நிற்கின்றன. இவ்வருளடையாளப் பண்பைத் திருமுழுக்கு உறுதி செய்கிறது. அதாவது திருமுழுக்குப் பெற்ற அனைவரும் திருஅவை எனும் கிறிஸ்துவின் மறைஉடலில் அங்கமாகின்றார்கள், இறைவாழ்வில் மறுபிறப்பு அடைகிறார்கள். இவ்வாறு கிறிஸ்தவ ஒன்றிப்பு வாழ்வு என்பது ஓர் அருளடையாள வாழ்வு (காண்.கி.ஒ.22). கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கையினால் இச்சகோதரர், சகோதரிகளின் வாழ்வு ஊட்டம் பெறுகிறது (காண்.கி.ஒ.23).

- இவ்வாறு கிறிஸ்தவ ஒன்றிப்புச்செயற்பாடுகள் உண்மையான ஒன்றிப்புக்கான முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய மேலோட்டமான நடத்தையையும் முன்மதியற்ற ஆர்வத்தையும் கொண்டிருக்கக்கூடாது. மாறாக, முழுமையான, நேர்மையான கத்தோலிக்கப் பண்புடையதாக இருக்க வேண்டும். அதாவது, திருத்தூதர்களிடமிருந்தும் திருச்சபைத் தந்தையரிடமிருந்தும் நாம் பெற்றுக் கொண்ட உண்மையில் அது நிலைத்ததாகவும், கத்தோலிக்கத் திருச்சபை எப்போதும் எடுத்தியம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ள நம்பிக்கைக்கு இயைந்ததாகவும் அமைய வேண்டும். மேலும் இம்முயற்சிகள் பிற கிறிஸ்தவ சகோதரர், சகோதரிகளோடு இணைந்து இறை பராமரிப்பின் வழிகளுக்கு எந்தத்தடையும் விதிக்காத முறையிலும், தூய ஆவியின் வருங்காலத் தூண்டுதல்கள் பற்றி முன்தீர்ப்பு வழங்காத முறையிலும் தொடர வேண்டும் என சங்கம் கற்பிக்கின்றது (காண்.கி.ஒ.24). எனினும் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பணி என்பது நிறுவன மையம், ஆட்சி அதிகாரம், பன்மை மறுப்பு, மறைதூதர் தொடர் பாரம்பரிய பெருமை ஆகியன பற்றிப் பேசுகின்ற குறுகிய பார்வையைக் களைந்து இறைவார்த்தையின் பாதையில் நடப்பதாகும் என்பதை யாவரும் மனதில் இருத்தி செயற்படுவது சாலச்சிறந்தது.

***நிறைவாக***

திருத்தந்தை புனித 2ம் அருள் சின்னப்பர் 1995ம் ஆண்டு எழுதிய (ut unum sint no.2) "உற் ஊனும் சின்ற்" எனும் சுற்றுமடலில் ஒருங்கிணைப்புப் பற்றி இவ்வாறு கூறுகிறார். அதாவது, "கிறிஸ்துவை நம்புகின்ற மனிதர்களிடத்தில் குடிகொண்டுள்ள தூய ஆவியே திருஅவையை வழிநடத்துகின்றார். இந்த ஆவியே நம்புகின்றவர்களை ஒரே குடும்பமாக கிறிஸ்து என்ற மையத்தில் ஒன்றிணைகின்ற. இம்மையமே ஒற்றுமைக்கு அடிப்படைக் கொள்கையாகின்றது. இவ்வாறு, கிறிஸ்தவர் களிடையே நிகழ்கின்ற அடிப்படை ஒன்றிப்பு என்பது வெறுமனே நிறுவனத்தன்மை சார்ந்ததோ, கருத்தியல் சார்ந்ததோ, கோட்பாடுகள் சார்ந்ததோ அல்ல, மாறாக அது ஓர் ஆன்மீக இணைப்பாகும்.

இவ்வாறு 2ம் வத்திக்கான் சங்கத்தின் "கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு" தரும் படிப்பினைகள், முன்னைய கருத்துக்களுக்கு மாற்றீடாகத் தரும் சில முக்கிய கருத்துக்கள் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு சிறப்பம்சமாக அமைகின்றன. அவற்றுள் மிக முக்கியமானவை என மூன்றினைக் குறிப்பிடலாம். ஒன்று, ஏனைய சபைகளுக்கும், அச்சபைகளைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கும் இது காட்டும் மதிப்பு. இதுவரை திரிபுவாதச் சமூகங்களாகவும் பிரிவினைச் சபைகளாகவுமே கருதப்பட்ட ஏனைய சபைகளை இவ்வேடு திருச்சபைகள், திருச்சபை சமூகங்கள் என ஏற்றுக்கொள்வதோடு அச்சபைகளின் அங்கத்தவர்களை ஆண்டவரில் சகோதரர் சகோதரிகள் என அன்புடன் அழைக்கின்றது. எனவே மீட்பின் மறைத்திட்டத்தில் அவைகளும் தங்கள் சிறப்பையும் முக்கியத்துவத்தையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்துவிடவில்லை எனவும், கிறிஸ்துவின் உண்மையான திருச்சபையின் பல பண்புகள் இச்சபைகளிலும் இருக்க முடியும் எனவும் வலியுறுத்துகின்றது (காண்.கி.ஓ.3).

இரண்டாவது, உரோமைத் திருச்சபையே ஒன்றிப்பின் மையம், ஏனைய சபைகள் அதில் வந்து இணைவதே கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பதே முன்பு கொண்டிருந்த பார்வை. ஆனால் இவ்வேடு தெளிவுப்படுத்துவது, ஏனைய சபைகளிலும் இயேசுவின் ஆவி செயல்படுகிறார் (காண்.கி.ஓ.4). மேலும் கிறிஸ்துவே அனைத்துச் சபைகளினதும் ஒன்றிப்பின் மையம் (காண்.இ.ஓ.2) என்பதுமாகும். மூன்றாவது, கிறிஸ்தவத்தில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு ஏனைய சபைகளை மட்டுமே குறைகாணும் போக்கு கைவிடப்பட்டு, பிளவுக்கு இருசாராருமே பொறுப்பு எனும் கருத்து வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது (காண்.கி.ஓ.3).

இவ்வாறு கிறிஸ்தவர்கள் அனைவரையும் கிறிஸ்துவின் ஒரே திருச்சபையின் ஒன்றிப்பில் ஒப்புரவாக்கும் இத்தூய திட்டம் மனித ஆற்றலையும் திறனையும் கடந்து தூய ஆவியின் வழியாக நிறைவு காணவும், அதே ஆவியின் வழியாகக் கடவுளின் அன்பு மாந்தர் அனைவரின் உள்ளங்களிலும் பொழியப்படவும் உண்மைக் கிறிஸ்தவராய் ஆவியின் வழிகாட்டலில் செயற்படுவது அவசியமாகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சமய உரையாடல்:
# கத்தோலிக்க மரபுவழிச் சிந்தனையில் – ஒரு திருப்புமுனை

அருட்கலாநிதி அ.பி. ஜெயசேகரம்
விரிவுரையாளர்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

2015 ஆபிரிக்க கென்யாவில் அல்சாவ என்று சந்தேகிக்கும் இஸ்லாமியக் குழு கிறிஸ்தவர்களை தாக்க முனைவதற்கு பயணம் செய்த பேருந்தை இடைமறித்து இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் பிரிக்க கேட்டபொழுது அப்பேருந்தின் பயணிகள் அனைவரும் எங்கள் அனைவரையும் கொல்லுங்கள் அல்லது எங்களை விட்டுச் செல்லுங்கள் என்று அனைவரும் ஒத்துக் கூறினார்கள்

கடந்த பல நூற்றாண்டுகளாக சமயப் போர்களும் முரண்பாடுகளும் மதங்களுள் அங்குமிங்குமாக நடைபெற்றாலும் சம காலத்தில இது நிறுவன மயமாக்கப்பட்டுள்ளது. அதன் அகோரமுகத்தின் தாண்டவத்தைக் காண்கிறோம். வன்செயல்களும் போர்களும் சமயங்களால் உருவாக்கப்பட்ட ஒரு பயங்கரச் சூழல் இது. இது உலக அமைதிக்கும் மானிட வர்க்கத்துக்கும் மிக ஆபத்தானது. இது எனக்கும் உமக்கும் பாதுகாப்பற்ற சூழல். வீட்டை விட்டு வெளியேறினால் வீடு திரும்பி வருவோமோ என்ற சந்தேகம். இது மதங்களால் உருவாக்கப்பட்ட நிலையாயின் உலக சமாதானத்திற்காக உழைப்பது இன்றைய அவசர அறைகூவல். பல்மத சூழலில் வாழும் மக்கள் எவ்விதமாக இசைவாக்கம் பெற்று வாழ சமயங்கள் பயிலுவது முக்கியம். எனவே மதங்களுக்கு இடையிலான சமயப்பொறை, கூட்டொருமை, கூட்டு முயற்சி போன்றவைகளை வலுப்படுத்துவது வெறுப்புணர்வு, வன்செயல், அநீதி போன்றவைகளை முறியடிப்பதற்கு மிகவும் சக்தி வாய்ந்த ஊடகமாக அமையலாம்.

பல்சமய சூழமைவில் மறைத்தூதுப்பணி (Mission) என்றால் மனதில் உதிப்பது பல் சமய உரையாடல். கத்தோலிக்க திருஅவை நற்செய்தி அறிவிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து உரையாடலை, நற்செய்தி அறிவிப்பை அடைவதற்கான வழியாக பயன்படுத்துகிறது. திருஅவையின் உரையாடலில் இயேசுக்கிறிஸ்து ஒரே மீட்பர். இந்த மீட்பை அடைவதற்கு திருஅவை உருவாக்கப்படுகிறது. திருஅவை மீட்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையையும் நிறைவையும் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் நிறைவுக்குள் கொண்டுவரப்படவேண்டும். உரையாடலும் இதை நோக்கி நகர்த்தப்படவேண்டும். எனவே மறைத்தூதுப்பணியும் நற்செய்தி அறிவிப்பும் ஒன்றாகக் கருதப்பட்டு மனமாற்றத்தின் ஊடாக திருஅவையில் அங்கத்துவம் பெறுவது என்பதே மரபுச் சிந்தனை.

பல்சமய மக்கள் மத்தியில் வாழும் ஆசிய மண்டல இறையியலா ளர்கள் நற்செய்தி உரையாடலை ஒரு நாணயத்தின் இருபக்கமாக கருதுகிறார்கள். எனவே பிற மறைகளோடு உரையாடுகையில் அவர்களின் இறைநம்பிக்கை அனுபவங்களையும் அத்துடன் எமது ஆழமான நம்பிக்கையான நற்செய்தி பரம்பல் பணியையும் அவர்களுடன் பரிமாற வேண்டும். ஒன்றை அடைவதற்கு மற்றதை கருவியாகப் பயன்படுத்தக் கூடாது.[1]

மற்றைய மறைகளும் இறைமனித உறவு கொண்ட மீட்பில், இறை மனித உறவு கொண்ட சந்திப்பை ஏற்றுக்கொள்வதாயின் மறைத்தூதுப் பணியின் இலக்கு சற்று வேறுபட்ட விதமாக கிறிஸ்து பெருமான் முழங்கிய இறையரசின் பெறுமானங்கள் மையத்தில் செதுக்கப்படவேண்டும். திருஅவை இறையரசின் குறியீடாகவும் பணியாளராகவும் இருத்தல் வேண்டும். இதன் உருவாக்கத்தில் மறு மதத்தவர்களும் பயனாளிகள். எனவே மறைத்தூதுப்பணியில் உரையாடல் முக்கிய வகிபாகம் பெறுகிறது.[2]

### *முரண்பாட்டுச் சூழலில் மறைகள்*

நாம் மறைகளைப்பற்றி எண்ணுகையில் அவை மீட்புக்கான வழிகள் என்று சிந்திப்பதே மரபானது. இறப்பின் பிற்பாடு இன்னுமொரு உலகில் இடம்பெறும் வாழ்வைப்பற்றி மறைகள் பேசிக்கொண்டிருக்கின்றன. இதன் மையத்தில் கோட்பாடுகளையும் சடங்குகளையும் உருவாக்கி இவைகள் மீட்புக்கு எடுத்துச் செல்வதாகக் கூறுகிறது. ஆன்மீகம் மறு உலக மயப்படுத்தப்பட்டுள்ளது. அது இவ்வுலக மயப்படுத்தப்படவேண்டும்! மறைகளின் மையப்புள்ளி மீட்பு மட்டுமல்ல, மறை மனிதனின் அன்றாட வாழ்வாக இருக்கிறது. அது வாழ்க்கை முறையாக இருக்கிறது. பல மறைகளின் இருப்பு, யதார்த்தம் மட்டுமல்ல அது ஒரு முரண்பாடாகவும் உள்ளது. இது ஒரு இறையியல் முரண் மட்டுமல்ல சமூகப் பிரச்சனையா கவும் உள்ளது. சமயங்களில் பொதிந்துள்ள சமூக வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்மைகளைத் தவிர்த்து இறையியலாக்கம் செய்யமுடியாது. சமயத்தில் பொதிந்துள்ள சமூகவாழ்வின் மெய்மைகள் என்ன?

***சமூகத்தளத்தில் சமயங்கள்***

சமயங்கள் வாழ்விற்கு பின்னைய வாழ்வைப்பற்றி பேசலாம். ஆனால் இறைநம்பிக்கையாளர்களின் முக்கிய இலக்கு இவ்வுலகில் செம்மையாக வாழ்வதுதான். இதை நோக்குகையில் சமயங்கள் பண்பாடு, சூழல் என்பன சமூகமயமாக்கப்பட்டுள்ளன. இவைகள் ஊடாக சமயங்கள் அர்த்தமும் நிறைவும் வளர்ச்சியம் காண்கின்றன.

சமய அடையாளம் தனிமனிதனின் மையப்புள்ளியாக உள்ளது. அவனு(ளு)டைய அடிப்படை வினாக்களுக்கு வாழ்வின் நோக்குக்கும் முடிவுக்கும் தீர்மானங்கள் எடுப்பதற்கும் முக்கியமானதாக மட்டுமல்ல ஒரு குழுஅடையாளத்தின் வெளிப்பாடாக சமயம் அமைகிறது. குடும்பம் முதற்குழு, அடுத்ததாக சமயம் கணிக்கப்படுகிறது. பல தடவைகளிலே சகிப்பற்ற தன்மை, அடிப்படைவாதம், காழ்ப்புணர்ச்சி, போட்டி மனப்பான்மை போன்றவைகளை உருவாக்கும் களமாக அமைகிறது. பெரும்பான்மைச் சமயங்கள் தமது அதிகாரத்தை வெளிப்படுத்துகின்றன. சிறுபான்மைச் சமயங்கள் தம்மை பாதுகாப்பதற்காக போராடுகின்றன. பல் சமய நிலைப்பாடு போர்களிற்கும் முரண்பாடுகளிற்கும் வித்திடுகிறது. பல தடவைகளில் பொருளாதார அரசியல் தீர்மானங்களுக்காக பயன்படுத்தப் படுகிறது. மேலும் தமது அடையாளத்தைக் காப்பாற்றுவதற்கான தவிப்பில் பிற மறைகளை ஒதுக்கிவைப்பதும் பல தடவைகளில் அது அடிப்படைவாதமாகவும் மாறுகிறது.

***திருஅவையின் மரபுவழிச் சிந்தனையில் மாற்றம்***

கடந்த 50 வருடங்களாக சிந்தனை வீச்சில் பாராட்டுதற்குரிய மாற்றத்தை காண்கின்றோம். கிறிஸ்தவம் அல்லாத பிற மறைகள் மனித இறை மீட்புத் தொடர்பை உருவாக்க முடியாத கருத்து தொடக்கத்தில் நிலவியது. தனி நபர்கள் இறைவனோடு உச்ச நிலையில் உறவு கொண்டிருந்தாலும் அது சமயங்களினால் அல்ல என்ற கருத்தும் நிலவியது. ஆனால் வத்திக்கான் சங்கம் கத்தோலிக்க திருஅவையில் ஒரு புரிந்துணர்வு வெடிப்பை உருவாக்கியுள்ளது: "மக்கள் அனைவரும் ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்களே. மண்ணில் வாழ்வதற்கென்றே மனுக்குலம் முழுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் படைத்தார் என்பதால் மனிதர் அனைவருக்கும் பிறப்பிடம் ஒன்றே. அவர்களது இறுதிக்கடவுள் ஒருவரே".[3]

இருப்பினும் இறைவன் பிற சமயங்களில் இருப்புக் கொண்டுள்ளார் என்பதையும் செயலாற்றுவதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களது சுயவிருப்பத்தில் ஒரு மறையை தெரிவு செய்தாலும் அத்தெரிவு இறைவனின் சாயல் என்ற மையத்தில் ஏற்றுக் கொள்ளபட்டதே ஒழிய மறைகளின் கோட்பாடுகளைத் தழுவியது அல்ல.[4] சமயங்களில் வார்த்தை வித்துக்கள் இருந்ததென்று கூறினாலும் அதற்கு அப்பால் செல்லவில்லை. அம்மதங்களில் பொதிந்துள்ள புனித பெறுமானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பின்னணியில் வெளிவந்த நற்செய்தி அறிவிப்பு சுற்று மடல் பிற சமயங்கள் கடவுளை நோக்கி கரங்களை உயர்த்திக் கொண்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்தவ வெளிப்படுத்தல் கடவுளின் இறுதி முடிவாக உள்ளது. என்கிறது. திருத்தந்தை 2ம் யோவான் பவுல் சர்வமதத் தலைவர்களுடன் அசிசியில் ஒக்டோபர் 1986இல் கூட்டு வழிபாட்டில் மரபு வழிச் சிந்தனையில் இருந்து விடுபட்டு வேரோட்டமான கருத்தை முன்வைத்தார். அதாவது பிற மதத்தவர்கள் மன்றாடவும் இறைவனோடு தொடர்பு கொள்ளவும் முடியும்.[6] திருத்தந்தை 2ம் யோவான் பவுல் மீட்பரின் தூது (றெடெம்ரோறிஸ் மிசியோ) என்ற திருத்தூது மடலில் இறைவனின் ஆவியின் பிரசன்னமும் செயற்பாடும் மனிதப் பண்பாடுகளிலும் சமயங்களிலும் குடிகொண்டுள்ளது என்றார்.[7] ஆகவே பிற சமயங்கள் இறைவனை அடைவதற்கான வழிகள் என்று கூறப்பட்டும் அவைகள் வழக்கத்திற்குப் புறம்பான 'பிரத்தியேக வழிகள்' என்ற அடைமொழி பயன்படுத்தப்பட்டாலும், இதில் ஒரு திருப்பு முனையைக் காணலாம்.[8]

50 அல்லது 25 வருடங்களுக்கு முன்னராக திருஅவை உறுதியாகக் கூறிய விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுகையில் தற்பொழுது உறுதியாக சொல்லப்படுபவையும் மாற்றங்களைச் சந்திக்கலாம் என்பது தெளிவு. மனித சுதந்திரம், இறைநம்பிக்கை ஊடாக பிற மறைகள் இறை அனுபவத்தைப் பெறும் பொழுது திருஅவை தனது அளவுகோலினால் தீர்மானிக்க முடியாது.

பவுல் அடியார் இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுத்தவர். பழைய உடன்படிக்கை அர்த்தமற்றுப் போனதால் அது அழிக்கப்பட்டு புதிய உடன்படிக்கை உருவாக்கப்பட்டது (உரோ:9-11) என்பது நினைவுக்குள் கொணரப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***திருஅவையின் வகிபாகம்***

உலக மீட்புச் செயல் திட்டத்தில் திருஅவையின் பங்கென்ன? திருஅவை இயேசுவின் சீடர்களைக்கொண்ட குழு; இயேசு செய்த பணியைத் தொடரப் பணிக்கப்பட்டுள்ளது. இயேசு இறை அரசைப்பற்றி போதித்தார். இறைவாக்கினரின் மரவுக்கமைய இறையரசு அனைத்து மக்களின் உலகளாவிய கூட்டமைப்பு என்று எசாயா மொழிகிறார். “புறஇனத்தார் ஒளி நோக்கி வருவர் மன்னர் உன் இதய கதிர் நோக்கி நடைபோடுவர்” (எசா. 60:3) இதன் எதிரொலிப்புக்களை இயேசுவின் போதனையிலும் அவரின் பணியிலும் காணமுடியும். மேலும் இது தூயஆவியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (திப.10).

அன்பு, நீதி, வறியவர் மீது அக்கறை போன்றவைகள் உலகத் தோழமையின் பெறுமானங்கள். திரு அவை உலகுக்கு அனுப்பப்பட்ட குழுவாக ஓர் இறையரசின் அடையாளமாக, பணியாளராக செயலாற்றுகிறது. இது திருஅவையின் அழைத்தல், ஆணையாகவும் உள்ளது. ஆகவே திரு அவை ஒரு குறிக்கப்பட்டவர்களின் மீட்புக்காக முன்கூட்டியே தெரிவு செய்யப்பட்ட குழுவல்ல. திருஅவை புளிப்புமா போன்று அனைத்தையும் இறையரசுக்கு நிறைவாக மாற்றும் ஊக்கியாக இருக்கவேண்டும். இப்பணியில் திருஅவை தனது பிரசன்னத்தோடு அனைத்திலும் செயல்படும் ஆவி உலக மீட்பு திட்டத்தை நடாத்தி வருகிறது. கொரிந்தியர் மடலில் பவுல் அடியார்: “அனைத்துமே மகனுக்கு அடிபணியும் போது தமக்கு அடிபணிசெய்த கடவுளுக்கு மகனும் அடிபணிவார். அப்போது கடவுளே அனைத்துக்கும் அனைத்துமாய் இருப்பார்” (1.கொரி:15.28).

எனவே திரு அவையின் பணி உலக மக்கள் அனைவரையும் ஒப்புரவாக்குதல். ஆனால் உலகத்தில் உள்ள சில சக்திகள் இவ்வாறான ஒப்புரவுக்கு இடராக இருக்கின்றன. ஒதுக்குதல், சுயநலம், அதிகாரஆசை, அநீதி போன்றவை தமது நலனுக்குப் பயன்படுத்துகையில் இச் சக்திகளிற்கும் அமைப்புகளிற்கும் எதிராகப்போராட இயேசுவின் சீடர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

நாம் அனைவரும் வேறுபட்ட குழுக்களாக வேறுபட்ட சமயத் தளத்தில் வேறுபட்ட இலக்குகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். முரண்பாடு களைந்து சகிப்புத் தன்மையுடன் வாழ முடியும். முரண் உதயமாகும் பொழுது வேறுபட்ட குழுக்கள் போட்டி மனப்பான்மையில் மோதத் தொடங்குகின்றன. அனேகமாக குழுக்கள் அடுத்தவரை ஒதுக்கி அடிப்படைவாத உணர்வுகளோடு எழுச்சி அடைகின்றன. ஏனெனில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு தனது நம்பிக்கைதான் உலகத்திற்கு ஏற்புடையதென்றும் அடுத்தவர்கள் இதைப் பின்பற்ற வேண்டுமென்றும் ஆசிக்கின்றது. சில மறைகள் மற்றவர்களை மதம் மாற்றுவதில் தீவிரத்தன்மை கொண்டதாகவும் உள்ளன. மேலும் சிலர் தங்கள் கருத்தை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் மற்றவர்களை ஓரம் கட்டுவதாக அமைகிறது. தீவிரப் போக்கான மனமாற்றம் மறு சமயக் குழுக்களை தற்காப்பு அணுகுமுறைக்கு இட்டுச் செல்லும். அனேகமாக சமயங்களின் பலமும் அதிகாரமும் தங்களுடைய குழுவின் ஒரு சக்தியாக சமூக முரண்பாடுகளுள் பயன்படுத்தப்படுகின்றன.

அனைத்து மறைகளிலும் தமது மறைகளில் பொதிந்துள்ள சித்தாந்தங்கள்வழி மனமாற்றத்தைக் கொணரக்கூடிய ஞானிகள், அனுபூதிகள், இறைவாக்கினர்கள் உளர். திருஅவை போன்று சாத்தானையும் அதன்செயல்களையும் எதிர்க்கின்ற பிறமறைகளை திருஅவை விரோதிகளாகப் பார்க்காமல் அவர்களுடன் கூட்டிணைந்து செயல்பட அழைக்கப்டுகிறது.[9]

### *மறைகளில் இறையியலாக்கம்*

சமயங்களைப்பற்றிய இறையியல் பார்வை மாற்றத்தை வேண்டி நிற்கிறது. பழைய மரபுவழி எண்ணங்களை புதிய பார்வையில் அவதானிக்கும் தன்மையும் உள்ளது. எமது தொடக்கப் புள்ளியாக படைப்பின் பின்புலத்தில் மனிதர்கள் இறைவனுடைய சாயல். இறைவன் மனிதர்களோடும் தனி மனிதனோடும் குழுக்களோடும் பேசுகிறார். இந்த இறைமனித பரஸ்பர உறவு முதன்மையானதாகவும் அடிப்படையானதாகவும் இருந்து மனிதனுடைய மனச்சாட்சியூடாக பிரதிபலிக்கின்றது. இது மீட்புத்தன்மை கொண்டது. இது அனைத்து சமயங்களுக்கும் முன்னே இருப்புக் கொண்டது. சமூகமாக மக்கள் வாழ்ந்த காலங்களில் இது நிலைத்து நின்றது. சமயங்கள் அவர்களது கோட்பாடுகள் அடையாளங்கள் மூலமாக தங்களது கடவுளைப்பற்றிய மனித உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. மானிட வெளிப்பாடுகள் பெரும்பாலும் பண்பாடு, வரலாறு, மனித தாகிப்புகள் ஊடாக நெறிப்படுத்துதல். இவை மேலும் இறைமனித உறவை சுலபமாக்குகின்றன. கிறிஸ்தவம் அல்லாத மறைகளும் இந்த உறவில் இருப்புக் கொண்டுள்ளது. கிறிஸ்தவ மரபில் இது இறைவனின் மீட்பு உடன்படிக்கை என்று சொல்லப்படுகின்றது. 2ம் யோவான் பவுல் மக்களைப் பிரிப்பதை விடுத்து மக்களை எது இணைக்கிறதோ இறைத்தன்மையும் இறை ஆழமும்கொண்டது என்கிறார்.[10]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையரசு இறைவனுடைய செயல்திட்டம்; எங்கே அவர் பிரசன்ன மாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறாரோ அங்கு இறையரசு பிரசன்னமாக இருக்கிறது. இறைவனுடைய பிரசன்னமும் அவருடைய செயல் திட்டமும் திருச்சபைக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. அதே விதமாக இறையரசும் திருச்சபைக்கு கட்டுப்பட்டதல்ல. இறைவன் அனைத்து மதங்களிலும் செயற்படுகிறார் என்றால் இறையரசும் பிறமதங்களிலும் செயற்படுகிறது.

இறையரசை உருவாக்கும் தாகிப்பு பிறசமய நம்பிக்கையாளர் களையும் கூட்டொருமையுடன் உழைக்க அழைக்கிறது, இதன் தேவையை திருச்சபையும் உணர்ந்து செயலாற்ற அழைக்கப்படுகிறது. 2ம் யோவான் பவுல் சென்னையில் பெப்ரவரி 1986 இல் சர்வ மத தலைவர்களிற்கு கொடுத்த உரையில்: "சர்வமதங்களைப் பின்பற்றும் நாம் சமயச்சுதந்திரம், மானிட சமத்துவம், கல்வி, பண்பாடு இவைகளை வளர்ப்பதற்கு, பாதுகாப்பதற்கு உழைப்போம்".[11]

***உசாத்துணை நூல்கள்***


1. Michael Amaladoss, A vision of Mission in the New Millennium, - Religious Pluralism and Mission, 2000 Bombay, p. 1
2. Ibidem p.1
3. இரண்டாம் வத்திக்கான் சங்கம், கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு 1
4. இரண்டாம் வத்திக்கான் சங்கம், சமயச் சுதந்திரம் 1
5. நற்செய்தி அறிவிப்பு மடல், 53
6. Marcello Zago, "Day of Prayer for Peace" in Pontifical Council for Inter Religious Dialogue, Bulletin 22, 1987, p.150
7. Ibidem No.28
8. John Paul ll, Redemptoris Missio 28
9. முனைவர் செங்கைப் பொதுவன், கடவுள் நினைவுகள், வசந்தா பதிப்பகம், சென்னை, 2005, ப.12.
10. Pontifical Council for Inter Religious Dialogue, Bulletin 22, 1987,p. 56
11. Ibidem. Also in Redemptoris Missio 28.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித இரண்டாம் யோவான் பவுல்

அருட்சகோதரன்ச. யூட் கெமில்டன்
2ம் வருட இறையியல்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை



மரபுகளுக்கு அடங்காத இறையன்பும் பிறரன்புமே வாழ்வின் இரு துருவங்கள் என்று வாழ்ந்து தன்னுள் அனுபவித்த இறையன்பையும் பேதுருவானவரின் வழித்தோன்றலால் கிடைத்த அருளாசியையும் வெளிவிளிம்பு மக்களுக்கு எடுத்துச் சென்று இறைமக்களின் பணியாளனாய் சொல்லிலும் செயலிலும் நற்சான்று பகர்ந்த திருத்தந்தை தான் புனித இரண்டாம் யோவான் பவுல்.

போலந்து நாட்டை பொதுவுடமைக் கட்சி ஆட்சி செய்த காலத்தில் இறை மறுப்புக் கொள்கையை மக்களிடையே பரப்ப முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. இக்கால கட்டத்திலே போலந்தின் வாடோவிஸ் (Wadowice) நகரத்திலுள்ள காலிகியா என்னும் கிராமத்தில் கரோல் வொய்ரிலா (Karol Wojtyla) மற்றும் எமிலியா (Emilia) தம்பதியினரின் மூன்றாவது பிள்ளையாக 1920ம் ஆண்டு மே மாதம் 18ம் நாள் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் பிறந்தார். இவரது பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் கரோல் ஜோசப் வொய்ரிலா (Karol Joseph Wojtyla). இவர் பிறப்பதற்கு முன்னதாகவே இவருடைய சகோதரி ஓல்கா (Olga) குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டார். இவருடைய சகோதரர் எட்மண்ட் (Edmund) பியல்ஸ்கோ நகரில் மருத்துவப் பணியாற்றி வந்தார். இவர் சிறுவயது முதலே இறை நம்பிக்கையிலும், கீழ்ப்படிதலிலும் சிறந்த சிறுவனாக விளங்கினார். சிறுவயதிலே விளையாடும் போது கத்தோலிக்க சிறுவர்களோடு மட்டுமல்லாது தனது கிராமத்தில் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்களோடும் சேர்ந்து விளையாடி நட்புக்கொண்டார். கரோலினுடைய தாயார், தான் இறைவார்த்தையை வாசிக்கும் போது கரோலைத் தன்னோடு அணைத்துக் கொள்வார். இவ்வாறாக இவர் தனது தாயாரின் அன்பை அதிகமாய் பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தனது அன்பான தாயை ஒன்பதாவது வயதில் இழந்து தவித்தார். எமிலியா இதய நோயாலும் நுழையீரல் பாதிப்பாலும் 1929ம் ஆண்டு இறந்தார். மீண்டும் கறோலை துயரம் துரத்தியது. தனது சகோதரர் எட்மண்டை பன்னிரெண்டாவது வயதில் இழந்து வேதனைப்பட்டார்.

எட்மண்ட் நச்சுக் காய்ச்சலுக்குள்ளான ஒரு நோயாளியை பராமரிக்கும் போது அதே நோயின் தாக்கத்திற்குள்ளாகி 1932ம் ஆண்டு இறந்தார். இந்த இழப்புகளுக்குப் பின் 1938ம் ஆண்டு தமது சொந்த ஊருக்கு விடைகொடுத்து கிரக்கோவ் நகரிலுள்ள டெப்ளிக்கி என்னும் இடத்தில் தந்தையும் தனையனும் குடியேறினர். தனது 21வது வயதில் 1941ம் ஆண்டு இதய நோயினால் பாதிக்கப்பட்ட தன் தந்தையையும் இழந்து அநாதையானார். ஆனால் இறைவன் தனது பிள்ளை கரோலுக்கென பெரிய் திட்டத்தையே வைத்திருந்தார். மேலும் கறோல் தனது விண்ணக அன்னை மரியா மீது அளவுகடந்த பாசமும் பற்றும் வைத்திருந்தார்.

தனது தாயின் மூலம் இறைநம்பிகையைப் பெற்ற இவர் தாய் இறந்த பிறகு தந்தையினூடாக ஆன்மீகம் மற்றும் கல்வியிலே வளர்ந்து இறையன்பை சுவைத்தார். தந்தையின் இறப்புக்குப் பின் கல் உடைக்கும் குவாரியில் வேலை செய்தார். அப்போது இரு விபத்துக்களில் சிக்கினார். ஆனால் இரண்டிலுமே உயிர் பிழைத்ததால் இறைபராமரிப்பை அதிகமாக உணர்ந்தார்.

மேலும் போலந்தில் ஜேர்மானிய ஆதிக்கம், நாசிசக் கொடுங்கோல் ஆட்சி, தன் சொந்த மக்களின் வேதனை, புலம்பல், ஜேன்ரயனோஸ்கி (Jan Trynowski) என்ற பக்திமிகு தையல் கலைஞரின் நட்பு ஆகியவை இவரது இறையழைத்தலைத் தூண்டின.

ஜேர்மானிய அரசு குருமடங்களுக்குத் தடைவிதித்தபோதும் இந்த தடையை மீறி மறைமுகமாக கர்தினால் அடம் ஸ்ரீபன் சபியேகா (Cardinal Adam Stefan Sapieha) அவர்களால் நடத்தப்பட்டு வந்த குருமடத்தில் 1942ம் ஆண்டு கறோல் குருமாணவனாக இணைந்தார். பின் கிரக்கோவிலுள்ள உயர் குருமடத்தில் தனது படிப்பை மேற்கொண்டு 1946ம் ஆண்டு தனது 26வது வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின் தனது மேற்படிப்பை உரோமையில் மேற்கொண்டார். கல்வித்துறையில் சிறப்பாக எழுத்தாளராக பன்மொழிப்புலவராக தேர்ச்சி பெற்றார். தனது மேற்படிப்பை முடித்துவிட்டு தன் சொந்த நாடு திரும்பிப் பல பங்குகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றினார். கிரக்கோவ் மாநிலதுணை ஆயர் இறந்துவிட 1958ம் ஆண்டு தனது 38வது வயதில் துணை ஆயராக நியமனம் பெற்றார். பின்னர் இம் மறைமாவட்டத்தில் பேராயராகவிருந்த பாசியக் என்பவரது மறைவுக்கும் பின் இரு ஆண்டுகள் மறைமாவட்ட கண்காணிப்பாளராக (Vicar Capitular) பணிபுரிந்தார். இவரது செயற்றிறனையும் ஆர்வமிக்க சேவையையும் பாராட்டிய திருத்தந்தை ஆறாம் பவுல், 1963ம் ஆண்டு பேராயராகவும் 1964ம் ஆண்டு மறைமாநிலப் பேராயராகவும் இவரை நியமித்தார். இக்காலகட்டத்தில் நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்திலும் பங்கேற்று சங்கத்தின் முடிவுகளில் முக்கிய பங்குவகித்தார். ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட பிறகும்கூட, இரண்டு அறைகளைக் கொண்ட ஓர் எளிமையான இல்லத்திலேயே தன்னுடைய வாழ்வை தான் எங்கு சென்றாலும் மிதிவண்டியிலேயே பயணம் செய்தார். இவ்வாறான எளிமையான வாழ்வை வாழ்ந்தார். வாழ்ந்த இவரை திருத்தந்தை ஆறாம் பவுல் 1967ம் ஆண்டு கர்தினாலாக உயர்த்தினார்.

திருத்தந்தை முதலாம் யோவான் பவுல், தான் பொறுப்பேற்று முப்பத்து மூன்றே நாட்களில் யாரும் எதிர்பாராத விதமாக இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தை முதலாம் யோவான் பவுலின் மறைவிற்குப் பின் திருச்சபையின் 264வது திருத்தந்தையாக 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16ம் நாள் தெரிவு செய்யப்பட்டவர் தான் கருதினால் கரோல் ஜோசப் வொய்ரிலா. இவர் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் என்னும் பெயரை ஏற்றார். இவர் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்படும் பொழுது இவருக்கு 58 வயது. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், ஒல்லாந்த திருத்தந்தை ஆறாம் ஏட்றியனுக்கு பின்னர் 45 ஆண்டுகளுக்கு பிறகு இத்தாலிக்கு வெளியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது கிழக்கு ஐரோப்பிய போலந்து நாட்டு திருத்தந்தை ஆவார்.

இவர் திருத்தந்தையாகப் பணியேற்ற போது கூறிய வார்த்தை: "நான் இந்த நியமனத்தை ஏற்பதற்கு தயங்குகின்றேன், இருந்தும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு அடிபணிந்து, அவருடைய தாய் அதிபரிசுத்த கன்னி மரியாளிடத்தில் எனது முழுமையான நம்பிக்கையையும் வைத்து இதனை ஏற்றுக்கொள்கின்றேன்." இவ்வாறாக தனது சொல்லில் மட்டுமல்லாது செயலிலும் இறைநம்பிக்கையோடும் கன்னிமரி பாசத்தோடும் வாழ்ந்தவர்தான் புனித இரண்டாம் யோவான் பவுல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல், இன்று மானிடத்தைக் கலங்கடிக்கும் காரணிகளான கருக்கலைப்பு, கருத்தடைச் சாதனங்கள், சிசுக்கொலை, ஓரினச் சேர்க்கை, விவாகரத்து, ஏழைகளைச் சுரண்டல், இனப்படுகொலை, ஏற்றத்தாழ்வு போன்றவற்றை வன்மையாகக் கண்டித்தார். எல்லாச் சமயங்களுக்கும் மதிப்புக்கொடுத்து பிற சமயத் தலைவர்களோடு உரையாடி, நல்லுறவை ஏற்படுத்தி உலக அமைதிக்காகப் பாடுபட்டார். உரோமையிலுள்ள பெரிய தொழுகைக்கூடத்திற்கு சென்று கத்தோலிக்க யூத உறவினைப் புதுப்பித்தார். மக்கள் தேவைக்கேற்ப திருமடல்களையும், திருத்தூது அறிவுரைகளையும் இன்னும் பல ஆவணங்களையும் எழுதினார்.

1981ம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் நாள் மாலை வேளையில் பேதுருவானவர் சதுக்கத்திலே மக்களைச் சந்திப்பதற்காக வாகனத்தில் சென்றுகொண்டிருந்த பொழுது முகமது அலி அஃகா (Mehmet Ali Agca) என்னும் துருக்கி நாட்டு இளைஞனால் சுடப்பட்டார். ஆனால் தீவிர மருத்துவம் பெற்று குணமடைந்தார். இரண்டரை வருடங்களுக்குப் பின்பு சிறைக்குச் சென்று அலி அஃகாவைச் சந்தித்து அவரை மனதார மன்னித்தார். திருச்சபை யாரையெல்லாம் துன்புறுத்தக் காரணமாயிருந் ததோ அவர்கள் அனைவரிடமும் பல்வேறு காலகட்டங்களில் மன்னிப்புக் கேட்டார்.

26 ஆண்டுகள், 168 நாள்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் திருத்தந்தையாக பணியாற்றிய புனித இரண்டாம் யோவான் பவுல் 129 நாடுகளுக்குமேல் பயணம் சென்று இயேசுவின் போதனைகளைப் பறைசாற்றினார். மறைபரப்புப்பணியின் மீதுள்ள ஆர்வத்தாலும் மனித குலத்தின் மீது வைத்திருந்த அன்பினாலும் தமது பணியைத் தளராது செய்தார். "திருத்தந்தை தான், வத்திக்கான் நகரின் கைதியல்ல" என்பதை தனது வாழ்நாளில் மேற்கொண்ட திருப்பயணங்கள் மூலம் நிரூபித்தார். இதனால்தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "இவர் திரு அவையின் மிகச் சிறந்த மறைபரப்புப் பணியாளர். உலகின் எல்லா இடங்களிலும் நற்செய்தி அறிவித்த ஒரு மாமனிதர் இவர்" என்று புகழ்ந்துள்ளார். இறுதியாக பார்கின்சன் (Parkinson) நோயினால் பாதிக்கப்பட்டு 2005ம் ஆண்டு சித்திரை 2ம் நாள் தனது 84வது வயதில் இவ்வுலக ஓட்டத்தை முடித்துக் கொண்டார். புனிதருடைய பரிந்துரையால் பார்கின்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயினால் பாதிக்கப்பட்ட பிரான்ஸ் நாட்டு அருட்சகோதரி மரிய சைமன் பியர் (Marie Simon Pierre) மற்றும் மூளையின் நரம்புச் சிதறல் நோயினால் பாதிக்கப்பட்ட கொஸ்ரரிக்கா நாட்டு திருமதி மோறா (Mrs Mora) என்பவரும் குணம் பெற்றனர். திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் 2011 வைகாசி 1ம் நாள் அருளாளராக திருத்தந்தை பதினாறாம் பெனடிற் அவர்களால் உயர்த்தப்பட்டார். திருத்தந்தை பிரான்சிஸ் இவரை 2014 சித்திரை 27ம் நாள் திரு அவையின் ஒரு புனிதராக திருநிலைப்படுத்தினார். இப்புனிதரின் திருவிழா ஐப்பசி மாதம் 22ம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

***உசாத்துணை நூல்கள்***

PAOLA S. SALVATORI, The Jubilee of Mercy, Enrico Castellini Foundation, Rome, 2015

ஞானசேகரன், ஜெ, தீயை மூட்டிய அமைதிப் புறாக்கள், வைகறை பதிப்பகம், திண்டுக்கல், 2015





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Synopsis

## Separationism and the Reunion Efforts in the History of the Church

The Church was initiated by Jesus at the time of Pentecost. Jesus wanted the Church to be united but from the beginning itself it was divided due to various reasons. This division is against it is nature and high motivation.

Even though there division in the Church many reunion efforts have been taking place. The first division started with the separation of the Eastern Church because of the heresies such as Arianism, Nestorianism, Monophysitism, and Monothelitism. In the year 1054 the whole Eastern Church separated itself totally from the Roman Church.

In the 14th and 15th centuries many reunification efforts were taken but none of them succeeded

1. The 14th General Council was organized in the year 1274 by The Holy Father Gregory X, at Leons.
2. The 17th General Council was summoned by Pope Eugene IV. He invited both the churches (Eastern and Western) through the letter called (Laetentur Coeli).

The unification efforts did not succeed due to the political uncertainties and untrustfulness between the two Church Leaders. This division affects the internal administrative structure of the Western Church during the time of the Avignon Papacy, and it was called Babylonian Captivity. And this informal instability led the Western Church to have two Popes and two teams within the Curia.

In this crutial situation some Theologians from the Paris University came forward and gave three proposals to calm the situation.

1. Forced resignation of the two Popes and elect a new pope.
2. To have discussions to solve the problem
3. To Summon a General Council



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

These efforts too did not work out well, rather it increased the problem and a third Pope was elected. In the year 1414, Pope John XXIII summoned the General Council at Constantou. Through the election of the new Pope Martin the internal division came to an end.

In this chaotic situation Martin Luther brought the reformation against the authority of the Church. His reformation affected the Church and it led the Church towards more division. The whole of Europe faced many divisions and opposition such as Swinglism, Calvinism, finally the Church of England during the fight between the Roman Church and King Hentry VIII.

In the years 1545-1564 the Council of Trent was summoned due to the problems and defined many doctrines. The 30 years of dispute came to an end in the year 1648 due to the Peace Memorandum which is called Peace of Wesphalia.

## Inter Religious Dialogue is the Need of the Hour for Peace in Sri Lanka

Dialogue, first of all, is a form of commounication between persons or group of persons. If I can promote interpersonal relationship the persons or groups in question, cherish different views, be it on cultural, ideological, religious, etc. The matters for dialogue frankly open themselves to each other in order to learn, appreciate and to enrich themselves. The parties in dialogue accept and respect each other as persons or groups, irrespective of differences in their views and convictions. They make a sincere effort to listen to the other to seek for meaning, to understand, and if need be, to change.

Interreligious dialogue, then, is a type of commounication between the followers of different religions. It means not only discussion but also, it includes all positive and constructive interreligious relation with the individuals and the communities of the other faiths which are directed at mutual understanding and enrichment (D.V.3).

Sri Lanka is a pluralistic nation irrespective of all differences. But it is sad to see that it has been living it's pluralistic country because of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

political dilemma. Thus, it created a chaos especially in using religion to propagate their political gains. This shattered the relationship and created unwanted struggles between people. The scars of brothers is still severely experience among the people in varied ways to be reconciled with acceptance and justice.

Hence, interreligions dialogue is an indispensable dimension of the Sri Lanka mission for coming towards a healthy pluralistic nation to have a strong love, much patience and humility with good perparation in making Sri Lanka a paradise.

## The Catholic Church and the Christian Denominations

In the Nicene Creed, we profess, "We believe in One, Holy, Catholic and Apostolic Church." Thee are the four marks or characteristics of the Church.

There have been many divisions in the Church down through its history. and these divisions have deeply challenged the aspect of oneness or unity of the Church. However, these divisions are not the only cause that affected the unity of the Church, because even within each church we can see many issues of dispute that affect the unity of the Church.

St. Paul, in his writings, speaks about different Churches in relation to their diverse characteristics, but, emphasises the unity of the Church in relation to its common aspects, that is, the members of the Church share in one spirit, onebelief, one Baptism and one God (cf. Eph. 4:4-6). Hence, the unity of the Church depends on the basic faith that we believe in one God, one Lord and one Spirit.

The Catholic Church, which continues to invite its members to pray for Christian unity recognises three important concerns for the future consideration, integrating the initiatives for Christian unity with the pastoral activities of the Diocese.

Providing the Laity, Priests, Religious and Seminarians with the knowledge of Christian unity looking for ways and means to prevent people from crossing over to other denominations.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Basic Teaching of the Church in Unitatis Redintegratio

Unitatis Redintegratio, the Decree on Ecumenism very clearly emphazizes the importance of Christian Unity as a basic characteristic of the Church and the document marks the importance of restoring the unity among all Christians as one of the Principals concerns of the second Vatican Council.

The Documents ellaborates the oneness of the Church, with all its richness found in the grace of Christ himself and points out the different opinions that prevent us from experiencing the beauty of this unique oneness. The 1st chapter portrays the Catholic principles on ecumenism and clearly teaches us that the active participation by the Catholic faithful in ecumenical work should grow day by day and earnestly, invites all the faithful in the active practice of ecumenism. In the 3rd chapter the document also draws its attention towards the principal types of division which affects the seamless robe of Christ.

With all these references the Sacred Council firmly hopes and invites for a fruitful reconciliation of all Christians in the unity of the one and only Church of Christ and it places it is hope entirely in the prayer of Christ, for the Church in the Love of the Father for us, and in the power of the Holy Spirit.

## Inter Religious Dialogue: a Paradigm Shift

Down through the centuries there were sporadic fights and conflicts among the followers of world religions, but it has now become organized violence because of increasing interaction between adherents of various faiths. It becomes dangerous to world peace and humanity at large, as a result the world has become unsafe place to live for you and me.

Interfaith cooperation among religious communities around the world is a powerful counterbalance to hate violence, and injustice.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The official approach in the Church gives priority to proclamation and understands dialogue as a step towards proclamation. Some in Asia suggest that proclamation and dialogue are two sides of one coin and we should not instrumentalize one of them in favour of the other. They understand in promoting the Kingdom of God. The believers of other religions are recognized as collaborators.

Most religions do not differ so much on belief in One God and Salvation as something that happens after death in another world. The concern of adherents is about life before death rather than after death. Religions are part of everyday life. They relate to each other in all types of modes. It is not only a theological problem, but also a social problem. Hence theology should take into account the social reality of religion, or else it becomes irrelevant.

Religions may claim revelation and talk about divine realities, but their primary target is to offer guidelines for life here and now. Religion is a central element in individual and social identity. It plays greater role in searching for meaning, goal-setting and decision making. Another important component in religion is group identity. Everyone is socialized in the context of a social group.

## Shift in understanding

For the last fifty years the understanding of religions has been changing. At the Second Vatican Council the Church acknowledged that God is the common origin and goal of all religions. But it did not accept that God was present and active in the other religions, but admitted on the dignity of the people as images of God and not on the legitimacy of other religions. The Post Synodal document on Evangelisation spoke of other religions as human hands stretched out to God. At Assisi in October 1986 John Paul acknowledged that members of other religions can pray which marks a radical departure. And John Paul ll acknowledges the presence and action of the Spirit of God in all human beings and in religions in his encyclical *Redmptoris Missio*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

If God's presence and action is not limited to the Church, the presence of Kingdom of God is not limited to the Church either. If God is present and active also in other religions, then the Kingdom of God is present also in the other religions. If the Kingdom of God is the goal of mission, then the collaboration with other religions and with all people of good will is the way of mission.

## St. John Paul II

On October 16th 1978 in the conclave for the election of the successor to pope John Paul I who passed away unexpectedly in a very short time of his Pontificate a cardinal from Eastern Europe was chosen: the polish cardinal Karol Jozef Wojtyla, the first non-Italian pope after more than 45 years from the dearth of the dutch Hadrian VI (He was only 58 Years Old).

Karol was born in Wadowice, near Krakow on 18th of May 1920 as the second son of karol Wojtyla and Emilai. His mother loved him so much. She gave him a solid faith from childhood. He was very pious and was experiencing the Divine love as well as human love. In childhood he played with Catholic as well as Jewish children indiscriminately. At the age of 9 he lost his loving mother and at the age of 12 again his brother (doctor) because of fever. And then he was with his father Karol who too died when Jozef Wojtyla was 19 years old. He was very much affected by the deaths of his parents and brother and by the communist rule of Nazi invasion. So he was well aware of the inhuman activities and atheistic movements.

He was ordained a priest in 1948, was named suffragan (the helping bishop) in Krokow in 1958. Pope Paul VI designated him as cardinal in 1967. He became Pope in 1978.

He is the Pope who travelled to more than 129 countries to proclaim the message of Jesus. He proved that he was not a prisoner of Vatican travelling all over the peripheries of the world. That is why Pope Francis a


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

said, He is very good missionary of the Church, who being greatman proclaimed the Good News all over the world.

He is the Pope who asked pardon from the people whom the church persecuted unjustly throughout 20 centuries, even for the murder of Galiles Galilei. He forgave Mehment Ali Agca who tried to assassinate him shooting him four times. One of the four bullets pierced through his abdomen but fortunately recovered especially with the intervention of Mother Mary.

He had very good relationship with other religious leaders. In 1986, he went to the great synagogue of Rome. He passed away on 2nd of April 2005 at the age of 84 because of parkinson disease.

There were two miracles attributed to St. John Paul II

1. A French nun Marie Simon-Pierre has been suffering from parkinson disease. So she prayed for the Pope's intercession. As a result she recovered having no medical explanation.
2. The Pope appeared before a Costa Rican woman Mrs. Mora who was in death bed because of an inoperable brain aneurysm. As a result of the Pope's intercession she had a miraculous recovery.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEUS CARITAS EST

...Caritas ex Deo est
Omnis qui diligit ex Deo natus est...
quoniam Deus Caritas est

கனவுகள் எல்லாமே நிஜமாய் ஆகுதே
தேடல்கள் வெண்பனி போல மறையுதே – 2
உணர்வுகள் எல்லாமே நனையுதே – 2
தவிப்புக்கள் முழுவதும் கரையவே – 2
ஒளியாய் பேரொளியாய்
அன்பாய் பேரன்பாய்
கடவுள் அன்பாய் பிறந்துள்ளார்
நிலம் கடல் தீ ஆகாயமே
காற்றும் கடந்து ஆனந்தமே
வான் எங்கிலும் மண் எங்கிலும் - நல்
மனங்களுக்கென்றும் கொண்டாட்டமே

மனித மனங்கள் இன்று எங்கே பயணம் போகின்றன
வெறுப்பு பொறாமை போட்டி அவற்றை ஆட்சி செய்கின்றன
கொடுக்கும் பழக்கம் செயற்கையாகி
இறுகிப்போயே உணர்வுகள்
வாளைக் கொண்டுதான் வையத்தில் ஆட்சியோ?
சிறையின் கம்பிதான் அமைதி தருமோ?
ரிகக ரிகக ரிககரிகக
காபமாகமமமா – 2
ஸாநிதபமாபமாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் ஒருநாள் இதுநாள் திருநாள்
ஊர் நிறைபாரிடை நீ உயிர் ஏற்றனை – 2
கொடுவாள் நெடிபோர் இனிநீ பொடியாக்கிடுவாய்
நலிந்தோர் தனை உன் அன்பால் இனி உயர்த்திடுவாய்
வாழ்க்கை போகும் தூரம்
நீ என் கூட தொடர வேண்டும்
அதுமட்டும் தான் எந்தன் நெஞ்சின் ஏக்கமே
தேடும் எந்தன் பாதை எங்கும்
தேடித் தேடிக் காண வேண்டும்
உன்னை மட்டும் எந்தன் நெஞ்சில் தாங்க வேண்டும்
தாதகிட தகதகதிமி -2
தாதகிட தகதகதிமிதா

அன்போடு இயைந்த வழக்கு என்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு
உயிர் உடலுடன் சேர்ந்து மக்கள் இனத்தில்
பிறப்பு எடுத்தது, அன்புணர்வு கொண்டு
ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதற்காகத்தான்

நத்தார் கீதம் பாடல் வரிகள்,
இசை: அருட்சகோதரன் கு.கிருஷாந்த்
மூன்றாம் வருட இறையியல்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

**"இறையியல் கோலங்கள்"**
**வாசகர்கள் அனைவருக்கும் எமது**
**இனிய நத்தார், புதுவருட**
**வாழ்த்துக்கள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 200/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 20
€ 18

தனிப்பிரதி 80/=


தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482, 021 222 7145


## IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly
Annual Subscription : Local (Incl.postage) Rs. 200/=
Foreign (Incl.postage) U.S.$ 20
€ 18
Single Copy Rs.80/=


Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel : 021 222 2482, 021 222 7145



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org